விலை ரூபா: 10.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 22 புதன்கிழமை (04.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168




## காணாமல் போனோர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

காணாமல் போனவர்களைப்பற்றி தினமும் முறைப்பாடுகள் வருகின்றன. யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல; கொழும்பில் இருக்கும் போதும் இவ்வாறான முறைப்பாடுகள் நேரடியாகவும் கடிதங்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகவும் தினமும் வந்துகொண்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் உரியதரப்பினருடன் தொடர்பு கொண்டு தன்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற் கொண்டுவருவதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று பொதுமக்களை சந்தித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. அவர் தொடர்ந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள அனர்த்தத்தில் 22 பேர் பலி மூன்று இலட்சம் பேர் இடம்பெயர்வு

(கொழும்பு)

தென்பகுதியிலும் மலையகத்திலும் கடந்த மூன்று நாள்களாகப் பெய்து வரும் கடும் மழை மற்றும் மண் சரிவினால் இதுவரை 22 பேர் பலியாகியுள்ளனர். 3 இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

தென்பகுதியிலுள்ள களுத்துறை, காலி, இரத்தினபுரியிலும் மலையகத்தில் நுவரெலியா, கேகாலை, கற்றன் போன்ற இடங்களிலும் கடும் மழையும் மண்சரிவும் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை மாவட்டத்திலேயே மழையினாலும் மண் சரிவினாலும் இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள பெரும்பாலான கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன் பல இடங்களில் தொடர்ச்சியாக (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளை சர்வதேசம் வெகுவிரைவில் அங்கீகரிக்கும்

## பா.நடேசன் தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கை அரசாங்கத்தினால் மீறப்படுகின்ற மனித உரிமை மீறல்களை நாமும், சுயாதீனமாக இயங்கும் மனித உரிமை அமைப்புக்களும் சர்வதேச சமூகத்தின் முன் கொண்டு சென்றுள்ளோம். இவ்வாறான நிலையில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் எதிர்காலத்தில் எங்கள் மீதான தடையை நீக்கி எங்களை அங்கீகரிக்கும் நிலைவரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் அணியினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

(கிளிநொச்சி)

வவுனியா மேற்கில் குஞ்சுக்குளத்திற்கும் மூன்றுமுறிப்புக்குமிடையில் ஆழஊடுருவும் அணியினர் மேற்கொண்ட தாக்குதல் முயற்சியை முறியடித்துள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

அப் பகுதியில் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் படையின் ஆழ ஊடுருவும் அணி தாக்குதல் மேற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள மீனவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்குக் கடல் வழியாக ஆயுதங்களைக் கடத்த வள்ளங்களை வழங்கிய நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர் ஒருவரை விசேட பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த மீனவர் கடற்புலிகளுக்கு இரகசியமாக அடைக்கலம் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீர்கொழும்புப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட கடற்புலி உறுப்பினர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (சு-5)

## கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று

(திருகோணமலை)

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று காலை ஆரம்பமாகவுள்ளது. திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள கிழக்கு மாகாண சபையின் பேரவை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹறான் விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண சபையின் ஆரம்ப அமர்வுக்கான பிரகடனத்தை மேற்கொள்வார்.-

அதனைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் இம் மாத இறுதியில் நேர்முகத் தேர்வு

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் இம் மாத இறுதிக்குள் வழங்கப்படும் என வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு அமைவாகப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாத இறுதிக்குள் நடைபெற்று நியமனம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையின் முடிபுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியதும் இரு வாரங்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் எனவும் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தரம்–05 புலமைப் பரிசில்
பயிற்சி வினாத்தாள் – 01

## குற்றவாளிகள் எவரானாலும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலான் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து அமெரிக்கா அதிருப்தி தெரிவித்துள்ளது. அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க மனித உரிமை மற்றும் தொழில் விவகார துணைச் செயலாளர் எரிக்கா பார்க்ஸ் ரகல்ஸ், கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் ஆங்கில வார இதழுக்கு அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் குறிப்பாக அரச படைத் தரப்போ அல்லது வேறு ஏதாவது ஆயுதக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

விரிவான விசார (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் கிளைமோர் பொதுமக்கள் 6 பேர் பலி

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகிய மாங்குளத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு பொதுமக்கள் பிரயாணம் செய்த கார் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கனகராயன்குளம் பகுதியில் உள்ள புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் திருவிழாவுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் பயணம் செய்த கார் மீதே இந்தக் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சமாதான செயலகம் தெரிவிக்கின்றது.

இந்தத் தாக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
# திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் 2008
## கலை முதற்தேர்வு
## கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008

மேற்படி கல்வியாண்டுகளில் கலைமுதற்தேர்வுக்காக புதிதாக பதிவு செய்த மாணவர்களின் நன்மை கருதி வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால்,07.06.2008 (சனிக்கிழமை) தொடக்கம், 13.07.2008 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தில், பின்வரும் நேர அட்டவணையின் பிரகாரம் திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மேற்படி கல்வியாண்டுகளில் கலைமுதற்தேர்வுக்காக பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் இத்திசைமுகப்படுத்தும் வகுப்புக்களில் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### நேர அட்டவணை

| திகதி | பாடம் | காலை | மாலை |
|---|---|---|---|
| 07.06.2008 சனிக்கிழமை | அரசியல் விஞ்ஞானம் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 08.06.2008 ஞாயிற்றுக்கிழமை | அரசியல் விஞ்ஞானம் | 9.00-12.00 | |
| 09.06.2008 திங்கட்கிழமை | பொருளியல் | 9.00-11.00 | 12.00-2.00 |
| 10.06.2008 செவ்வாய்க்கிழமை | பொருளியல் | 9.00-11.00 | 12.00-2.00 |
| 11.06.2008 புதன்கிழமை | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 13.06.2008 வெள்ளிக்கிழமை | வரலாறு | 9.00-12.00 | 1.00-3.00 |
| 14.06.2008 சனிக்கிழமை | வரலாறு | 9.00-12.00 | |
| 14.06.2008 சனிக்கிழமை | அளவையியலும் விஞ்ஞான முறைகளும்<br>குடித்தொகைக் கல்வி | | 1.00-3.00<br>1.00-3.00 |
| 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை | சுற்றுப்புறச் சூழற் கல்வி | 9.00-11.00 | 12.00-2.00 |
| 16.06.2008 திங்கட்கிழமை | கிறிஸ்தவ நாகரிகம் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 17.06.2008 செவ்வாய்க்கிழமை | கிறிஸ்தவ நாகரிகம் | 9.00-12.00 | |
| 17.06.2008 செவ்வாய்க்கிழமை | அளவையியலும் விஞ்ஞான முறைகளும் | | 1.00-3.00 |
| 18.06.2008 புதன்கிழமை | புவியியல் | 9.00-11.00 | 12.00-2.00 |
| 19.06.2008 வியாழக்கிழமை | புவியியல் | 9.00-11.00 | 12.00-2.00 |
| 20.06.2008 வெள்ளிக்கிழமை | அடிப்படைக் கணிதம் | 9.00-11.00 | 12.00-2.00 |
| 21.06.2008 சனிக்கிழமை | இந்து நாகரிகம் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை | இந்து நாகரிகம் | 9.00-12.00 | |
| 23.06.2008 திங்கட்கிழமை | நாடகமும் அரங்கியலும் | 9.00-1.00 | |
| 24.06.2008 செவ்வாய்க்கிழமை | நாடகமும் அரங்கியலும் | 9.00-1.00 | |
| 25.06.2008 புதன்கிழமை | ஆங்கில இலக்கியம் | 9.00-1.00 | |
| 26.06.2008 வியாழக்கிழமை | ஆங்கில இலக்கியம் | 9.00-1.00 | |
| 27.06.2008 வெள்ளிக்கிழமை | மெய்யியல் | 9.00-1.00 | |
| 28.06.2008 சனிக்கிழமை | சமூக உளவியல் | 9.00-1.00 | |
| 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை | மெய்யியல் | 9.00-1.00 | |
| 30.06.2008 திங்கட்கிழமை | தமிழ் | 9.00-1.00 | |
| 01.07.2008 செவ்வாய்க்கிழமை | வணிகக் கல்வி | 9.00-12.00 | 1.00-3.00 |
| 02.07.2008 புதன்கிழமை | வணிகக் கல்வி | 9.00-12.00 | 1.00-2.00 |
| 02.07.2008 புதன்கிழமை | முகாமைத்துவத்திற்கோர் அறிமுகம் | 9.00-1.00 | |
| 04.07.2008 வெள்ளிக்கிழமை | தமிழ் | 9.00-1.00 | |
| 05.07.2008 சனிக்கிழமை | சங்கீதம்/ நடனம் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 06.07.2008 ஞாயிற்றுக்கிழமை | சங்கீதம்/ நடனம் | 9.00-12.00 | |
| 12.07.2008 சனிக்கிழமை | மொழியியல் | 9.00-12.00 | 1.00-3.00 |
| 13.07.2008 ஞாயிற்றுக்கிழமை | மொழியியல் | 9.00-12.00 | |

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

03.06.2008

**பதிவாளர்.**

(C-1184)

# ஒலிம்பியட் போட்டியில் தெரிவான மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

2007ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற மாணவர்களில் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியட் போட்டியில் தோற்றியவர்களில் மாகாண மட்டப் பயிற்சிக்கு 41 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதலாவது பயிற்சி வகுப்பு எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. உரிய மாணவர்கள் தமது பெற்றோருடன் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு

**விஞ்ஞானம்**

ஜசிந்தகுமார் ஆறுமுகம், தயாநிதி டிலோசா, ரவீந்திரன் றக்சனா, தனூசயன் கருணாகரன், சொர்ணலிங்கம் கோகுலன், மகேந்திரன் றணோஸன், திருமாறன் இளமாறன், பரமேஸ்வரன் பவித்திரா, ஜதுஷன் தங்கராசா, விதுரா கனகலிங்கம், அற்புதராசா அஜந்தநாத், சத்தியநாதன் சிவதுர்க்கா, கிரிஜா பிரபாகரன், ரவிதரன் அபிராமி, தயாகுணன் ஜனித்தா, அமுதலிங்கம் அமிர்தவாஸ், மணிவண்ணன் திருசிகா, முகுந்தன் கம்சர்ஜினி, திசன் இளங்குமரன், தஞ்சயன் கம்சா.

**கணிதம்**

மகீசன் பத்மநாதன், மணிவண்ணன் மதுஷன்,மனோகரன் துசிதா, மணிசேகரன் டரண்யா, அன்ரனிராஜன் யூடின் கௌசி, பாலேந்திரன் அருண்ஜன், விஜயபாஸ்கர் சேஷன், இராமகிருஸ்ணன் கீர்த்திகா,பிரபாகரன் கரணி, சுதானந்தராஜா சங்கவி, சாகித்தியன் யோகேந்திரராசா, மதுஜன் சிவானந்தன், லக்சுயன் ஜெயக்குமார், கனகலிங்கம் சங்கீத்,லக்சியா உதயகுமார், வைஸ்ணவி கருணைநாதன், ஆரபி சிவசிதம்பரம், வினோவிதன் பரமேஸ்வரன், சிறீபகவன் சுஜீவா, சிவஞானம் கஜானி, யோகச்சந்திரன் அபிராமி. (ச)

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் அதிபரின் அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கல்லூரியின் அபிவிருத்தி வேலைகளுக்கான அங்கீகாரம் பெறப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் இ.செல்வநாதன் கேட்டுள்ளார். (ச)

## திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் அலகினால் 2006 / 2007 மற்றும் 2007 / 2008 கல்வி ஆண்டிற்கு முதற்கலைத் தேர்வுக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம் 13 ஆம் திகதி வரையும் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திசைமுகப்படுத்தும் வகுப்புகளிற்கு குறித்துரைக்கப்பட்ட நாட்களில் சமுகம் தந்து பயன்பெறுமாறு மாணவர்களுக்கு வெளிவாரிப் பட்டப்பதிவுகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் அறிவித்துள்ளார். (ச)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் இறுதியாக நடைபெற்ற முதல்கலைத் தேர்வுக்கான பரீட்சை முடிபுகள் இன்று வெளியாகின்றது.

பரீட்சார்த்திகள் தமது பரீட்சைப் பெறுபேறுகளை மேற்படி அலகில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் பெற்றுக் கொள்ள முடியுமென வெளிவாரி பட்டப்பதிவுகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் அறிவித்துள்ளார். (ச)


**விற்பனை**

வீட்டுத் தளபாடங்களுடன் ஓகன், கிற்றார், மீன் தொட்டி என்பனவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளும் நேரம் பிற்பகல் 3-6 மணிவரை.

இ.நிரோசன்
55/54, கல்லூரி வீதி,
நீராவியடி.
(C-1185)


## அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்தி லெனின் விளையாட்டுக்கழக அங்குரார்ப்பண நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு தலைவர் ஆ.சத்தியன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி எஸ்.மனோன்மணி கலந்து கொள்கிறார்.

அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து பயிற்சிப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ஏ)

## 'தேடல்-1' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தேடல்-1 வெளியீட்டு விழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறும்.

தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தலைவர் செல்வன் ப.கபிலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினராக முன்னாள் சமஸ்கிருதத்துறை பேராசிரியர் இலக்கிய கலாநிதி வி.சிவகாமியும், சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் ச. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நூல் அறிமுக உரையை வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணமும் வெளியீட்டு உரையை சட்டத்துறை தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதனும் நிகழ்த்துவர்.

முதல் பிரதியை வணிகத் துறைத்தலைவர் கே.கே.அருள்வேல் பெற்றுக்கொள்வார். (ச)

## திறந்த பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக 2008/2009 புதுமுக மாணவர்களின் பதிவு தொடர்பான கலந்துரையாடல் நாளை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து புதுமுக மாணவர்களும் மத்திய நிலையத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களுடன், யாழ். பிராந்திய நிலையத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

# இன்று ஒரு தகவல்

## விழித்திரை அடையாளம்

ஒரு ஆளை அடையாளம் கண்டுபிடிக்க சுலபமான வழி அவரின் முகத்தைப்பார்த்துக் கண்டுபிடிப்பது தான். ஆனால், மனிதன் தவறு செய்யும்போது அவனைக் கண்டு பிடிக்க வேறு வழிகளைத்தான் கையாளவேண்டியுள்ளது.

இதற்கு கைரேகை தான் உபயோகப்புடுகிறது. கைரேகைகள் ஒருவருக்கு இருப்பது மாதிரி இன்னொருவருக்கு இருப்பதில்லை. பல்வரிசையும் அப்படித்தான். ஏமாற்றுக்காரர்கள் அதிகம் இருப்பதனால் இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

Bio metrics எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவில் சில பாதுகாப்பு உத்திகளை உருவாக்கியுள்ளனர்.

வீட்டின் சொந்தக்காரருடைய குரல் அல்லது கைரேகை ஒரு எலக்ரோனிக் சாதனத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கும். அவர் குரல் கொடுக்கும் போதோ அல்லது கையை வைக்கும் போதோ அதை ஒப்பிட்டுப்பார்த்து சரியாக இருந்தால் மட்டுமே வீட்டின்கதவு திறப்பது மாதிரி ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள்.

இதேமாதிரி ஒருவருடைய விழித்திரையிலுள்ள இரத்தக்குழாய் அமைப்பு இன்னொருவருக்கு இருப்பதில்லை. அதனால் அதைவைத்து, அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய சாதனங்களும் தற்பொழுது புழக்கத்துக்கு வந்துள்ளன.

கைரேகை சாதனத்தைவிட, விழித்திரை இரத்தக் குழாய் அமைப்பை அடையாளம் காணும் சாதனம் மிகவும் நுட்பமானது. நம்பத்தகுந்தது. ஒருவரை இனங்காண இது எடுத்துக்கொள்ளும் நேரம் ஒருவிநாடி தான்!

ஒரு கருவியில் உள்ள சிறுதுளையில் கண்ணை வைத்துப் பார்க்கும்போது, இந்த சாதனம் குறைந்த சக்தியுள்ள இளஞ்சிவப்பு நிற ஒளியைப் பாய்ச்சி, அவரது விழித்திரையின் அமைப்பை ஆராய்ந்து ஏற்கனவே அதன் நினைவுப்பெட்டகத்திலுள்ள அமைப்புகளுடன் ஒப்பிட்டு சரியான ஆளை அடையாளம் காட்டிவிடும்!

குரலைவைத்து அடையாளம் கண்டுபிடிப்பதும் Biometrics முறைகளில் ஒன்று! ஒருநபரின் குரலை டிஜிட்டல் குறியீடுகளாக மாற்றி பதிவுசெய்து மீண்டும் அதே குரலை இனங்காணக்கூடிய சாதனங்கள் ஏற்கனவே அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துவிட்டது. ஒருவருக்கு ஜலதோஷம் என்றால் கூட அந்த சாதனம் சரியாகவே கண்டுபிடிக்குமாம்.

குரலை மாற்றி பேசுபவர்கள்கூட இந்தக்கருவியை ஏமாற்ற முடியாது! இதை ஆஸ்பத்திரிகள், வங்கிகளிலுள்ள இரும்புப்பெட்டக காப்பறைகள் போன்ற வற்றிலும் உபயோகப்படுத்தலாம். கதவைத் திறக்கத் தெரியாத குழந்தைகள்கூட குரல் எழுப்பியே கதவைத்திறந்துவிட முடியும்!

எதிர்காலத்தில் Biometrics முறை இன்னும் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஸ்டியரிங்கை தொட்டதுமே கார் சாவியில்லாமல் (Key) இயங்க ஆரம்பிக்கும். ஆனால் இந்த தொழிநுட் பத்தால் கார் சொந்தக்காரர் தொட்டால் தான் "ஸ்ராாட்" ஆகும்! ஒரு மனிதனுடைய நடை, அவர் ரைப்றைட்டரை தொடும் விதம் இதையெல்லாம் வைத்துக்கூட ஆளை அடையாளம் காணக்கூடிய தொழில் நுட்பம் வரலாம்!

என்னதான் தொழில்நுட்பம் வந்தாலும், குடும்பத்துக்குள் நடக்கின்ற திருட்டுக்களை கண்டுபிடிப்பது ரொம்ப கஷ்டம்.

ஒரு வீட்டில் பெட்டியில் இருந்த பணம் காணாமல் போய்விட்டது. வீட்டுக்காரர் அல்லது பையன் தான் எடுத்திருக்க வேண்டும். பெட்டியைத்திறந்து பார்த்த வீட்டுக்கார அம்மா... "இதிலிருந்து பணத்தை எடுத்தது நிச்சயமாக எனது வீட்டுக்காரர் இல்லை!" என்று உறுதியாக சொன்னார். அந்த வீட்டுக்காரருக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது.

"அது எப்படி அவ்வளவு கரெக்டா சொல்கிறாய்?" என்று அவரே கேட்டார். "பெட்டியில் இன்னும் கொஞ்சப் பணம் மிச்சம் இருக்கு... அதனால்தான் அப்படிச் சொன்னேன்!" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# எரிபொருள் நுகர்வோர் அரசின் திறமையின்மைக்கும் விரயங்களுக்கும் சேர்த்தே விலை கொடுகின்றனர்

## பொருளியலாளர் முத்துகிருஷ்ணா சர்வானந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் எரிபொருள் நுகர்வோர் உலக சந்தையில் ஏற்பட்டிருக்கும் எண்ணெய்விலை அதிகரிப்புக்கு மாத்திரமின்றி உள்நாட்டின் பொதுச் சேவையில் காணப்படும் அதிக செலவினங்களுக்கும் சேர்த்தே விலை கொடுக்கின்றனர் என பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைமை ஆய்வாளரும் பொருளியலாளருமான முத்துகிருஷ்ணா சர்வானந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தரவுகளின்படி, இந்த வருடத்திற்கான எரிபொருள் இறக்குமதிப் பட்டியல் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டின் அரசாங்கங்கள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிரப்பி வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நஷ்டங்களுடன் ஒப்பிடுகையில், 2008 ஆம் ஆண்டின் முதற்காலாண்டில், லங்கா இந்தியன் ஓயில் கம்பனி சில்லறை விற்பனை முகாமைத்துவம் மூலம் இலாபத்தை ஈட்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையின் எரிபொருள் நுகர்வோர் உலக சந்தையின் எண்ணெய் விலையேற்றத்திற்கு மாத்திரம் விலை கொடுக்கவில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத் திறனின்மை, ஊழல், வீணான செலவினங்கள் அனைத்திற்கும் சேர்த்தே விலைகொடுக்கிறார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# மியன்மாரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம்

மியன்மாரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கும் வேலை அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கூட்டுறவுக் கடைகளில் இருந்து இன்று தொடக்கம் பாவனையாளர்கள் ஒருகிலோ அரிசியை 60 ரூபாவுக்கு பெறமுடியும் என்று வர்த்தக அமைச்சின் செயலாளர் ஆர்.என்.கே.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மியன்மாரில் இருந்து 10 ஆயிரம் மென்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது.

ஜப்பானில் இருந்து 2 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு பேச்சுக்கள் நடாத்தப்பட்டுவருகிறது.

இந்த அரிசி கிடைக்கப்பெற்றதும் பற்றாக்குறை நிலை காணப்படாது என்றும் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-7)

# தமிழக கடற்படையின் ரோந்து அதிகரிப்பு

(சென்னை)

இலங்கையின் இனப்போரின் தாக்கம் தமிழ்நாட்டில் ஏற்படக்கூடாது என்பதைக் கருத்திற் கொண்டு தமிழக கரையோரக் காவற் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக விசாகப்பட்டினம் கடற்படைப் பொறுப்பதிகாரி நிமல்குமார் வர்மா தெரி வித்துள்ளார்.

இராமேஸ்வரத்திற்குக் கடந்த சனிக்கிழமையன்று விஜயம் செய்த அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இதேவேளை இலங்கையில் இருந்து வரும் அகதிகளைப் பாதுகாக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தமிழீழ விடுதலைப்புலிகள் அகதிகள் என்ற அடிப்படையில் தமிழகத்திற்கு ஊடுருவலாம் என வெளியான தகவல் தொடர்பிலேயே வர்மா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ச-7)



பருத்தித்துறை "சாயி மந்திர்" நிலையத்தில் இடம்பெற்ற தென்னிந்திய சாயிவரதன் இசைக்குழுவினரின் இசைக்கச்சேரியைப் படத்தில் காணலாம். சாயிவரதன், சாயிராம், ஸ்ரீ ஆத்மிகா, உமா.வரதன் ஆகியோர் இசைக்கச்சேரி வழங்குகின்றனர்.

# இராசிபலன்

04.06.2008
(வைகாசி 22, புதன்கிழமை)
ரோகினி முற்பகல் 08.13 மணிவரை
பிரதமை முன்னிரவு 11.27 மணிவரை
இராகுகாலம் 11.52-01.22 மணிவரை
சுபநேரம்-04.22-05.52 மணிவரை
நயினாதீவு நாகபூஷணியம்மை கொடி

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, அதிகபிரயாசை, அமைதிக்குறைவு, பணவிரயம். |
| இடபம் | தெய்வசிந்தை, ஜனவசியம், புதிய பொருள்சேர்க்கை. |
| மிதுனம் | வீண் அலைச்சல், முயற்சி தாமதம், சுபசெலவு, ஆரோக்கியம். |
| கடகம | கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, தொழில் சிந்தை, ஆரோக்கியம். |
| சிங்கம் | உற்சாகம், தொழில் சிந்தை, முயற்சிகைகூடும், போசனசுகம். |
| கன்னி | உடல்உழைப்பு, ஆன்றோர் சந்திப்பு, பித்தரோகம், முயற்சிதாமதம். |
| துலாம் | ஆரோக்கியக்குறைவு, அபகீர்த்தி, காரிய தாமதம், அச்சம். |
| விருச்சிகம் | வாகனவசதி, உஷ்ணநிலை, காரிய அனுகூலம், குடும்பசுகம். |
| தனுசு | திடீர்பயணம், அதிகாரம், தொழில் சிந்தை, பணப்புழக்கம். |
| மகரம் | தாழ்ந்த சுபாவம், பூர்வபுண்ணிய கருமம், முயற்சிதாமதம். |
| கும்பம் | மனச்சஞ்சலம், வாகனசுகம், காரிய தாமதம், சுபசெலவு. |
| மீனம் | புதியபொருள் சேர்க்கை, காரிய நன்மை, போசனசுகம். |

வளவன்

# இந்து ஆலயங்களுக்கான விக்கிரகங்கள் பூசைப் பொருட்கள் வழங்க தீர்மானம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்து பண்பாட்டு நிதியத்தினால் வருமானம் அற்ற இந்துக் கோவில்களுக்கு விக்கிரகங்களும், பூசைப் பொருட்களும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பெறவிரும்புவோர் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலி வீதி, பம்பலப்பிட்டி என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (ஓ)

## கந்தவனக் கடவை ஸ்ரீ கந்தசுவாமிப் பெருமான் கொடியேற்றம் இன்றாகும்

### பாடிப் பணிந்தேன்

சுந்தரத்தமிழால் பக்தர்கள் சொல்பண்
சுருதி விளங்கப்பாடியாடி மகிழ்ந்தாட
கந்தவனக்கடவை கருணைமிகு
ஸ்ரீ கந்த சுவாமிப் பெருமான்
விந்தை மிகுந்த அற்புதங்களாற்றி
அடியவர்க்கு அருள்பாலிக்குமந்த அழகு
சந்தத் தமிழ் மறையை யென்நாவாலும்
பாடிப்பணிந்தேனே சரணம் ஐயா!

இராமஜெயபாலன்

## மஹா கும்பாபிஷேகம்

இமையாணன் மேற்கு விஸ்வகுல திருவருள் மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.38 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணைக் காப்பு சாத்துதல் இடம்பெறும். (அ-7)

## மஹோற்சவம்

இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 19ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத்திருவிழாவும், 23ஆம் திகதி திங்கட்கிழமை மாம்பழத் திருவிழாவும், 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைலாச வாகனம், கார்த்திகைத்திருவிழாவும், 30ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் சப்பறத்திருவிழாவும், யூலை மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 2ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (அ)

* * *

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். ஏனைய உற்சவதினங்களில்காலை 10.30 மணிக்கும் மாலை 5 மணிக்கும் வசந்த மண்டப பூசை இடம் பெற்று அம்பாள் வெளிவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (அ-136)

## கலைஞர்கள் விபரம் கோரல்

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையினால் மறைந்த மற்றும் வாழும் கலைஞர்கள் பற்றிய விபரங்கள் ஆவணப்படுத்தலுக்காக கோரப்படுகின்றன.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்களாவர்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30.06.2008 ஆகும். இதற்கான விண்ணப்ப படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் நல்லூர் பிரதேச செயலக கலாசாரபிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## வடஇலங்கை சங்கீத சபையின் பரீட்சை நிலைய இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையின் அறிமுறைப் பரீட்சை எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இப்பரீட்சை நடைபெற இருந்த வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் வேறு செயற்பாடுகள் நடைபெறவுள்ளதால் இப்பரீட்சை நிலைய இடமாற்றம் தவிர்க்க முடியாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சாந்திக மஹோற்சவம்

வன்-வடமேற்கு ஆணைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெறுவதால், அலங்கார உற்சவ தினங்களான இன்று தொடங்கி 18ஆம் திகதிவரை மாலை 4.30 மணிக்கு விஷேட அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விஷேட பூசைகள் நடைபெறும் என ஆலைய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-6)

## நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்,

இக் கூட்டத்தில் தவறாது சமூகமளிக்குமாறு நிறுவனத்தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ)

# யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான மற்றும் புத்தாக்க கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் தரம் 6 முதல் 13 வரையிலான வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் விஞ்ஞான ஆக்கங்களினதும் புத்தாக் கங்களினதும் கண்காட்சி E.S பேரம்பலம் சக நிறுவனத்தினரின் அனுசரணையுடன் இம் மாதம் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை மூன்று தினங்களுக்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 மணி முதல் பி.ப.3.30 வரை நடைபெறவுள்ளது.

தரம் 6முதல் 13 வரையிலான வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறலாம் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

அத்துடன் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் புத்தாக்க கண்காட்சி யூன் மாத இறுதி வாரத்தில் யாழ்.மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் எனவும் அறிவித்துள்ளார். (ஓ)

# இலங்கை வங்கிக் கிராம எழுச்சிவிழாவும் விளையாட்டுப் போட்டியும்

புத்தூர் மேற்கு கலைமதி இலங்கை வங்கிக் கிராமம் அறிமுக எழுச்சி விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் கலைமதி சனசமூக நிலைய போசகர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக இலங்கை




வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந. சிவரட்ணம், கோப்பாய் பிரதேச செயலர் எஸ். மோகன்ராஸ், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி அரசகுமார், கிராம உத்தியோகத்தர் எஸ். எழிலரசன், புத்தூர் பிரதேச சபை செயலாளர் கே. நடராசா, புத்தூர் மேற்கு கலைமதி ச.ச. நிலைய தலைவர் செ.ரஞ்சிதகுமார், கலைமதி விளையாட்டுக்கழக தலைவர் கு. மகாதேவன், விவசாய சம்மேளன தலைவர் எஸ். கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

# குடாநாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பு அவசியம்-அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்.குடாநாட்டில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டில் உள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் அந் நிறுவனங்களின் பணிகள் இன்னும் அதிகளவில் பரந்துபட்ட மக்களிடையே ஒருங்கிணைப்புடன் போய்ச்சேருவதற்கு இந்த நிறுவனங்களுக்கிடையில் ஓர் ஒருங்கிணைப்பின் தேவை அவசியமாகும் என்பதை உணர்த்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். குடாநாட்டில் செயற்பட்டு வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் விபரங்களைத் தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும் இந்நிறுவனங்கள் தொடர்பில் சரியானதொரு ஆய்வினை மேற்கொண்டு அவற்றின் பணிகள் பொதுமக்களிடையே மென்மேலும் பயன்மிக்கவகையில் விரிவடையக்கூடிய நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் தான் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்ததுடன் குடாநாட்டில் தற்போதைய சூழ்நிலைக்கேற்ற தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டங்களை இனங்கண்டு இது தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளிப்பு

பொதுமக்களின் பங்களிப்புடன் குடாநாட்டில் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். இன்று எமது தொடருகின்ற இந்த அழிவு நிலையை மாற்றி கஷ்டங்களில் இருந்தும் துன்பங்களில் இருந்தும் எமது மக்களை வெளிக்கொண்டு வருவதற்கு சமுதாயத்தின் மீது பொறுப்புமிக்கவர்கள் முன்வரவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரத்தம் சிந்துவதற்கு தான் எவரையும் அழைக்கப்போவதில்லை எனக் கூறியதுடன், சரியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான வழியைப் பின்பற்ற முன்வர வேண்டும் என்றே தான் அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஒரு தொகை கற்றல் உபகரணங்களை குடாநாட்டுப் பாடசாலைகளுக்குக் கையளிப்பதாகக் கூறிய அமைச்சர், பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நல்லூர் முத்துத்தம்பி மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம் மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு முதற்கட்ட கற்றல் உபகரணங்கள் அமைச்சரால் கையளிக்கப்பட்டன. (அ)

# உலக வதிவிட தினத்தை ஒட்டிய சித்திரப் போட்டி

உலக வதிவிட தினத்தை ஒட்டி ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் (UN-HABITAT) அந்நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட சமூக அபிவிருத்தி சபைகளின் அங்கத்தவர் குடும்பங்களிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளிடையே சித்திரப்போட்டி ஒன்றை நடாத்த உள்ளது.

போட்டியில் வெற்றியீட்டுவோரில் முதல் மூன்று இடத்தை பெறுவோருக்கான பரிசுத் தொகைகள் முறையே 25,000/=, 15,000/=, 10,000/= ஆகும்.

இப்போட்டிக்கான சித்திரங்கள், உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் இம்மாதம் 15ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ இல 84, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள UN-HABITAT அலுவலக மாவட்ட முகாமையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான சுற்றுநிருபங்கள் ஏற்கனவே அந்தந்த வீட்டுத்திட்ட சமூக அபிவி ருத்திச் சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு அந்தந்த சபைகளையோ, அவ்வப்பகுதிக் கிராம அலுவலர்களையோ, அல்லது ஐக்கிய நாடு கள் வதிவிட நிறுவன அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளலாம் என மேற்படி அலுவலகமாவட்ட முகாமையாளர் க.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தொழிற்துறைத் திணைக்களத்தால் ஐலோ (ILO) நிதியுதவியுடன் நடாத்தப்பட்ட அலுமினியம் பொருத்துதல் பயிற்சி நெறியை கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், தொழிற்துறை திணைக்கள மாவட்ட அலுவலர் ப.இராகவன் உரையாற்றுவதையும் படத்தல் காணலாம். (படம்:- நல்லூர் செய்தியாளர்)

## துணை மருத்துவ சேவை பயிற்சி

கொழும்பு சுகாதார அமைச்சினால் துணை மருத்துவ சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை குறிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்புவதில் தபால் மூலம் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக அவற்றை சுகாதார சேவைகள் யாழ்.பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் கையளித்தால் கொழும்பு சுகாதார அமைச்சிற்கு அனுப் பிவைக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ)

# ஐ.பி.எல். இருபது-20 தொடரில் சாதித்த, சாதிக்காத அணிகள்

(மும்பை)

ஐ.பி.எல். கொண்டாட்டங்கள் ஒரு வழியாக முடிந்துள்ளன. சச்சின், தோனி, கங்குலி, ராவிட், யுவராஜ் சிங் போன்ற இந்திய அணித் தலைவர்கள் கோட்டை விட்ட கோப்பையை அவுஸ்ரேலியாவின் வோர்ன் கைப்பற்றியுள்ளார். இந்தத் தொடரில் எதிர்பார்த்த அணிகள் ஏமாற்றின. எதிர்பார்க்காத அணிகள் தூள் கிளப்பின. இந்தத் தொடரில் சாதித்த, சாதிக்காத அணிகள் பற்றி ஒரு கண்ணோட்டம்.

## ராஜஸ்தான் றோயல்ஸ்

முதல் ஐ. பி. எல் இருபது-20 கோப்பையை கைப்பற்றிய 'நம்பர் 1' அணி எமர்ஜிங் மீடியா நிறுவனத்தால் மற்ற எல்லா அணிகளைக் காட்டிலும் மிகக் குறைந்த தொகைக்கு வாங்கப்பட்ட வோர்ன்தலைமையிலான ராஜஸ்தான் அணிக்கு வோட்சன், தான்வீர், யூசுப்பதான், சிமித் ஆகிய நால்வரும் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தனர். அரையிறுதிக்கு கூட செல்லாது என்று கணிக்கப்ப்ட்ட அணியை தன்னுடைய திறமையால் தூக்கி நிறுத்தி நம்பர் -1 இடத்துக்கு கொண்டு வந்து சம்பியன் பட்டத்தையும் வென்று காட்டினார் அணித் தலைவர் வோர்ன். பந்து வீச்சிலும் சாதிக்கத் தவறவில்லை இந்த சுழல் மன்னன்.

## சென்னை சுப்பர் கிங்ஸ்

இறுதிப் போட்டி வரை வந்து கடைசிப் பந்தில் கோப்பையை பரிதாபமாகக் கோட்டை விட்ட அணி. முதல் சில போட்டிகளில் ஹைடன், மைக்கல் ஹசி போன்ற வீரர்களின் அதிரடியால் வெல்ல முடியாத அணியாக இருந்த தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ், அவர்கள் போன பிறகு தடுமாறியது.

ஒரு சில வெற்றிகளின் மூலம் தட்டுத்தடுமாறி அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் பஞ்சாப் அணியை எளிதாக வென்றாலும் இறுதிப்போட்டியில் போராடி தோல்வியடைந்தது. அணித்தலைவர் தோனி துடுப்பாட்டத்திலும் அணியை நிர்வகிப்பதிலும் பொறுப்பாக செயல்பட்டார்.

ரெய்னா, பார்த்திவ், பத்ரிநாத், வித்யூக் போன்ற இளம் வீரர்கள்தான் அணியை இறுதிப் போட்டிவரை அழைத்துச் சென்றனர். சகல துறை வீரர் மோர்கல் அணிக்கு பெரிய பலமாக இருந்தார். பந்துவீச்சில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட முரளிதரன் பெரிதாக சாதிக்கவில்லை. ஹோனி, பாலாஜி, நிற்னி மூவரும் முக்கிய போட்டிகளில் அணிக்கு வெற்றிதேடித் தந்தனர்.

## கிங்ஸ் லெவின் பஞ்சாப்

பாலிவூட் நடிகை பிரீத்தி ஜிந்தாவால் வாங்கப்பட்ட பஞ்சாப் அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் திறமையான வீரர்களுடன் தொடரில் எதிரணிகளை மிரட்டியது. தொடரின் முதல்தர துடுப்பாட்ட வீரராக மார்ஷ் எல்லா போட்டிகளிலும் ஜொலித்தார். இவரை ஆட்டமிழக்க செய்வது எதிரணி பந்துவீச்சாளர்களுக்கு பெரும்பாடாக இருந்தது. சங்ககார, அணித் தலைவர் யுவராஜ், பாமர்ஸ்பாச், கடிச், ஹோப்ஸ் என வலுவான துடுப்பாட்ட வீரர்களின் உதவியுடன் வெற்றிகளை குவித்தது. பந்துவீச்சில் பிரட் லீ போன பிறகும் இர்பான் பதான், சிறிசாந்த், வி.ஆர்.வி.சிங், பியூஸ் சாவ்லா ஆகியோர் அணியின் பலம் கொஞ்சமும் குறையாமல் பார்த்துக்கொண்டனர். ஆனால் சென்னை கிங்ஸிடம் மட்டும் பஞ்சாப் கிங்ஸின் பலம் கடைசிவரை எடுபடவேயில்லை. இதனால் இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்து அரையிறுதி ஆறுதலுடன் வெளியேறியது.

## டில்லி டேர்டேவில்ஸ்

டில்லி அணியின் மிகப் பெரிய பலம் அணித்தலைவர் சேவாக்கும், காம்பீரும் தான். இவர்களுடைய அதிரடி ஆரம்பத்தால் பல போட்டிகளில் வெற்றிகளை குவித்தது. ஆனால் தவான் மட்டுமே நடுத்தரவரிசையில் நன்றாக விளையாடினார். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட டிவில்லியர்ஸும், சொய்ப் மலிக்கும் உருப்படியாக எதையும் செய்யவில்லை. பந்துவீச்சில் யோமகேஸும் மகரூப்பும் கலக்கினார்கள். மெக்ராத் தன்னுடைய துல்லியமான பந்துவீச்சால் எதிரணியின் ஓட்டஎண்ணிக்கையை உயராமல் பார்த்துக்கொண்டார். இளம் வீரர் மிஸ்ராவும் ஆசிப்பும் ஓரளவுக்கு பந்துவீச்சில் உதவினார்கள்.

## மும்பை இந்தியன்ஸ்

ஐ.பி.எல்.தொடரில் மிகவும் பரிதாபத்துக்குரிய அணி சச்சினின் மும்பை இந்தியன்ஸ் அணிதான். ரிலையன்ஸ் நிறுவனத்தால் மிக அதிக தொகை கொடுத்து வாங்கப்பட்ட மும்பை அணி முதலில் தடுமாறியது. காயத்திலிருந்து சச்சின் மீண்டு வந்ததும் தொடர்ச்சியாக வெற்றிபெற்று அசத்தியது. ஆனால் அரையிறுதிக்கு தகுதி பெறத் தேவையான முக்கிய போட்டிகளில் கடுமையாக போராடி கடைசி ஓவர்களில் பரிதாபமாக தோல்வியடைந்தது. சச்சின் எதிர்பார்த்த அளவுக்கு விளையாடவிட்டாலும் அவர் வந்த பிறகுதான் ஜெயசூர்யா அதிரடி காட்டி மிரட்டினார். இவரை தவிர உத்தப்பா, பிராவோ, அபிஷேக் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் சிறப்பாக விளையாடினர். பந்துவீச்சில் நெஹ்றாவும், அனுபவ வீரர் பொலக்கும் கலக்கினர். கடைசி ஒருசில போட்டிகளில் பெர்னாண்டோ சிறப்பாக பந்துவீசி அசத்தினார்.

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட ஷாருக்கானின் கொல்கத்தா அணி முதல் போட்டியிலேயே பெங்களூர் அணியை சிதறடித்து மிரட்டியது. ஆனால் இடையில் சில போட்டிகளில் தோல்வியடைந்து தடுமாறியது. அணித்தலைவர் கங்குலி முதலில் சொதப்பினாலும் ஒரு சில போட்டிகளில் தன் பலத்தை நிரூபித்தார். டேவிட் ஹசி, சல்மான் பட், சுக்லா ஆகியோர் துடுப்பாட்டத்தில் ஒத்துழைத்தனர். பந்துவீச்சைப் பொறுத்தவரை புயல்போல் வந்த அக்தர் இரண்டு போட்டிகளில் கலக்கி விட்டு சென்றார். கடைசி சில லீக் போட்டிகளில் உமர் குல் சிறப்பாக பந்துவீசி அசத்தினாலும் அணியால் அரையிறுதிக்கு தகுதிபெற முடியாமல் போனது. திண்டா நம்பிக்கை தரும் பந்துவீச்சாளராக உருவாகியிருக்கிறார்.

## பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி தொழில் அதிபர் விஜய் மல்லையாவால் பெரும் தொகைக்கு வாங்கப்பட்ட அணி. முதல் போட்டியிலேயே கொல்கத்தாவிடம் பெரிய அடி வாங்கி ஏமாற்றியது. ராவிட், ஜாபர், கலிஸ், சந்தர்போல் போன்ற சிறந்த வீரர்கள் இருந்தாலும், இவர்களுடைய நிதானம் இருபது-20 கிரிக்கெற்றில் எடுபடவில்லை. அதிரடி வீரர்கள் மிஸ்பா உல் ஹக், ஓயிட், விராத் ஆகியோரும் பெரிதாக சாதிக்கவில்லை. பந்து வீச்சில் ஜாகிர்கான், ஸ்ரையன், பிரவீன் மூவரும் நன்றாக பந்துவீச்சினார்கள். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட கலிஸ், கும்ளே ஆகியோரின் பந்துவீச்சு கடைசிவரை எடுபடாமலே போனது.

## டெக்கான் சார்ஜர்ஸ்

லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி படுதோல்வி அடைந்து கடைசி இடத்தைப் பிடித்து முதலாவதாக அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

கிப்ஸ், அப்ரிடி, சைமண்ட்ஸ், கில்கிறிஸ்ட், ஸ்ரைரிஸ் என அதிரடி வீரர்களுடன் இருபது - 20க்கு ஏற்ற சரியான அணி என்று வர்ணிக்கப்பட்ட டெக்கான் அணி ரசிகர்களை பெரிய அளவில் ஏமாற்றியது.

சைமண்ஸ்ட், கில்கிறிஸ்ட் தவிர மற்றைய சர்வதேச வீரர்கள் சொதப்பினர். முதல் சில போட்டிகளில் மந்தமாக விளையர்டிய அணித் தலைவர் லக்ஸ்மன் காயம் காரணமாக விலக்கப்பட்டு கில்கிறிஸ்ட் அணித் தலைவரானார்.

ரோகித், வேணுகோபால் தவிர மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் கடைசிவரை போமுக்கு வரவேயில்லை.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங், ஓஜா ஆகிய இருவரைத் தவிர வேறு யாருமே சிறப்பாக செயற்படவில்லை. ஐ.பி.எல் தொடரில் வெற்றி பெற்ற அணிகள் தங்கள் பலத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தோல்வி அடைந்த அணிகள் தங்களுடைய பலவீனங்களை களைவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இதனால் அடுத்த தொடருக்கு முன்னதாக எல்லா அணியிலும் அதிரடி மாற்றங்களை எதிர்பார்க்கலாம். (5)

# ஆஸி.371 ஓட்டங்களால் முன்னிலையில்

(அன்ரிக்குவா)

சந்தர்போலின் சதத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் கௌரவமான இலக்கைப் பெற்றது.



தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் நான்காம்நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெற்றுக்களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்து 371 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 30ஆம் திகதி அன்ரிக்குவாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெற்றுக்களையிழந்து 479 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ஹடீச் 113 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 110 ஓட்டங்களையும் ரிக்கி பொன்டிங் 65, ஆட்டமிழக்காமல் பிரெட்லீ 63 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ரெய்லர் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெற்றுக்களையிழந்து 255 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சந்தர்போல் சதமடிக்க அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 352 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களை எடுத்து தொடரில் 2ஆவது சதத்தைப் பெற்றார். முன்தாக அணித்தலைவர் சர்வான் 65 ஓட்டங்களையும் மார்ஷல் 53 ஓட்டங்களையும் மற்றும் பிரவோ 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிரெட்லீ 5 விக்கெற்றுக்களையும் ஜோன்ஸன், மைக்கல் கிளார்க் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் மற்றும் மக்கில் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 127 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்து அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 6 விக்கெற்றுக்களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஜக் கீஸ் 76 ஓட் டங் களையும் ஆட்டமிழக் காமல் சைமண்ட்ஸ் 43 ஓட்டங்களையும் மற்றும் ஹஸி 40, பொன் டிங் 38 ஓட் டங் களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எட்வோட்ஸ், ரெய்லர் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக் களை வீழ்த் தினர். இரண்டாவது இன்னிங்ஸில் 371 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி முன்னிலையிலுள்ள நிலையில் 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெறவிருந்தது. (5)

# பாக்.அணி அறிவிப்பு

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையேயான ஒரு நாள் கிரிக்கெற் தொடர் பங்களாதேஸில் எதிர் வரும் 8ஆம் திகதி முதல் 14ஆந் திகதி வரை நடக்கிறது. இந்த தொடருக்கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி வருமாறு,

சொயிப் மலிக், (அணித்தலைவர்), சல்மான் பட், நசீர் ஜாம்ஷெட், யூனிஸ்கான், முகமது யூசுப், மிஸ்பா உல்-ஹக், அப்ரிடி, கமெரன் அக்மல், முகமட் ஆசிப், உமர் குல், சொகைல் தான்வீர், ராவ் இப்திகார், வகாப் ரியாஸ், நோமானுல்லா, பவாத் ஆலம், பஷித்கான். (5)

# சர்வதேசக் கிரிக்கெற்றிலிருந்து ஆஸி.வீரர் மக்கில் ஓய்வு



அவுஸ்ரேலியச் சுழல் பந்து வீச்சாளர் ஸ்டுவெட் மக்கில் சர்வதேச கிரிக்கெற்றில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தற்போது அண்டிகு வா வில் நடை பெற்று வரும் மேற்கிந்திய தீவுகளுக் கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியே தனது கடைசி டெஸ்ட் போட்டி என அவர் அறிவித்துள்ளார்.

37 வயதான ஸ்டுவெட் மக்கில் இதுவரை 44 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 207 விக்கெற்றுகளை வீழ்த்தியுள்ளார். அவரது பந்து வீச்சு சராசரி 28.43ஆகும். அவுஸ்ரேலிய அணியின் நிரந்தர சுழல் பந்து வீச்சாளராக ஓய்வு பெற்ற ஷேன் வோர்ன் நீண்டகாலமாக செயற்பட்டு வந்தமையால் ஸ்டுவெட் மக்கிலுக்கு ஆஸி அணியில் குறைவாகவே வாய்ப்புக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே மக்கல் 2009 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கெதிரான ஆஷன் டெஸ்ட் தொடரில்ஆஸி அணிக்காக விளையாடும் வாய்ப்பு இருக்கும் நிலையில் திடீரென தமது ஓய்வை அறிவித்துள்ளமை அந்த அணிக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

ஓய்வு பெற்ற ஷேன் வோர்ன் ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய அணிக்காக மீண்டும் விளையாட தயார் என அண்மையில் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# தூதுவர், அமைச்சர்களுக்கு அரசு சலுகை மக்களுக்கு அதிக விலையில் எரிபொருள்

## ஈரானிலிருந்து பெறப்பட்ட எண்ணெய் எங்கே? ஜே.வி.பி கடும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அமைச்சக்களுக்கும் குறைந்த விலையில் எரி பொருட்களை வழங்கும் அரசாங்கம் உலக சந்தையினை காரணம் காட்டி நாட்டு மக்களுக்கு அதிக விலையில் எரிபொருட்களை வழங்குவது கண்டனத்துக்குரியதாகும் என்று ஜே.வி.பி. யின் செயலாளர்ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் தேசிய நூலக ஆவணவாக்கால் சபை கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது ,

ஐ .தே .கட்சி எமது நாட்டுக்கு அறிமுகம் செய்த திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாகவே இன்றைய நிலை ஏற்பட்டுள்ளது எனவே, இதற்கெதிராக போர்க்கொடி தூக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் உள்ளூர்உற்பத்திகள் அதிகரிக்காது மக்கள் மீது வரியைச் சுமத்தி திறந்த பொருளாதாரக் கொள்கையையே முன்னெடுக்கிறது.

எனவே, இப்போது எமக்கு தேவை மாற்று பொருளாதார கொள்கையுடைய புதிய தொரு அரசாங்கமாகும். அதற்கான ஏற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் ஒரு லீற்றர் பெற்றோலை 130 ரூபாவுக்கு வழங்கும் அரசாங்கம் சலுகைகளை அனுபவிக்க வேண்டிய மக்களுக்கு 157 ரூபாவாக அதிகரித்து வழங்குகிறது. இது எவ்விதத்தில் நியாயமானதாகும்?

அரசாங்கத்தின் செலவுகளுக்கும் அமைச்சர்களின் சுக போகவாழ்க்கைக்கும் மக்கள் மீது வரிகளை சுமத்தி வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நெருக்கடிக்குள் மக்களை அரசு தள்ளிவிட்டுள்ளது.

குறைந்த விலையில 3. மாத கடன் அடிப்படையில் ஈரானிடமிருந்து எரி பொருளை பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்று உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்ததால் இங்கும் உயர்த்த வேண்டிய நிலை உருவாகியதாக அரசாங்கம் தெரிவிக் கின்றது. இரண்டு கருத்துக்க ளிலும் பரஸ்பரம் விரோதம் வெளிப்ப டுகின்றன.

எனவே, தற்போது வழங்கப் படுவது ஈரானிடமிரு ந்து குறைந்த விலைக்கு பெறப்பட்ட எரிபொருளா அல்லது உலக சந்தையில் கொள்வனவு செய்த எரிபொருளா என்ற உண்மையை நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அரசாங்க தரப்பினரே நூற்றுக்கு 40 வீதம் எரி பொருளை பயன்படுத்துகின்றனர். அமைச்சர்கள், அதிகாரிகள், ஆலோசகர்களென அதிகமான வாகனங்களை பாவிக்கின்றனர். இதனை குறைக்க வேண்டும். மக்களுக்கு எரி பொருளையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பாவிக்குமாறு பல இலட்ச ரூபாய்களை செலவழித்து விளம்பரம் செய்யும் அரசாங்கம் முதலில் முன்மாதிரியை மக்களுக்கு வழங்கவேண்டும் அரசாங்கத்தின் நிர்வாகத்திறன் இல்லாமை ஊழல் மோசடிகள், வீண்விரயங்களே உண்மையில் எரிபொருள் விலையேற்றத்திற்கு காரணமாகும்.

அரசாங்கம் பெற்றோலுக்கு மொத்தமாக 52 ரூபா 83 சத வரியை அறவிடுகிறது. பெற்றோலியக் கூட்டுத் தாபனம் 62 வீத இலாபத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளது.

எனவே இந்த வரியை நீக்கினால் 105 ரூபா விற்கு பெற்றோலை மக்களுக்கு வழங்க முடியும்.

ஆனால், மக்கள் மீது வரிகளைச் சுமத்தி வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் சலுகைகளை வழங்குகிறது அரசாங்கம். மசகு எண்ணெயை இலங்கைக்கு கொண்டு வந்து சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பதன் மூலம் உப பலன்களை அடைய முடிந்தது

நைலோன் உற்பத்தி , யூரியா தயாரிப்பு, காஸ் தயாரிப்பு போன்ற உப பலன்கள் மூலம் வருமானம் கிடைத்தது.

ஆனால் ,ஐ.தே.க. ஆட்சியின்போது இவையனைத்தும் மூடப்பட்டன. அவற்றை மீளத் திறப்பதற்கோ உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கோ இந்த அரசாங்கமும்முயற் சிக்கவில்லை.

எனவே தான்இன்றைய எரிபொருள் நெருக்கடி தோன்றியது. (அ-5)

## ஆசிரிய சேவையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

(அல்வாய்)

கல்வி அமைச்சின் 2005/4 இலக்க சுற்று நிருபத்திற்கு அமைவாக ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுகள் வழங்கப்பட உள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவலர்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவரது என். பி/3/1 இலக்கம் கொண்ட மே மாதம் 8 ஆம் திகதிய கடித மூலம் அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரிய சேவையில் வகுப்பு 1க்கான பதவியுயர்வு தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கான பதவியுயர்வுகளை 31/12/2005 வரையுள்ள சேவையின் அடிப்படை யில் தகைமைகளைப் பெறும் சகல ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலயக்கல்விப் பணிப் பாளர்கள்பணிக்கப்படடுள்ளனர்.

இதன் பிரகாரம்உரிய மாதிரிப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

எனவே இப்படிவங்களை 31/12/2005ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தகைமையினைப் பூர்த்தி செய்த சகல ஆசிரியர்களினதும் கவனத்திற்கும் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்களை வடமாகாண கல்வி செயலாளர் இ. இளங்கோவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஓ-19)

# வடக்கு -கிழக்கு மாகாண பெண்களின் எழுத்தறிவு வீதத்தை அதிகரிக்க கல்வி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பெண்களின் எழுத்தறிவு வீதத்தை அதிகரிப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜயந்த ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் ஊடகச்செயலாளர் ஜயவீர தெல்பாகொட தெரிவித்தார்.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப எழுத்தறிவு வீதமும் அதிகரித்துள்ளது .

இதன் பிரகாரம் 1948 ஆம் ஆண்டின் இலங்கை சனத்தொகையில் 40 வீதமானோர் எழுத்தறிவு உடையவர்களாக காணப்பட்டனர் . இந்த எழுத்தறிவு வீதமானது 2004 ஆம் ஆண்டில் 93 வீதமாக அதிகரித்திருந்தமை சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப எழுத்தறிவு வீதமும். அதிகரித்து காணப்படுவதற்கு சான்றாகுமென்று அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு இளைய வயதினரின் எழுத்தறிவு வீதமானது இளைய வயதினரின் எண்ணிக்கைக்கேற்ப வளர்ச்சி கண்டுள்ளது. அது மாத்திரமின்றி சனத்தொகையில்68 வீதமான பிள்ளைகள் 1948 இல் பாடசாலை செல்லாதவர்களாக இருந்தனர்.

2004 ஆம் ஆண் டில் இந்த வீதமானது 8ஆக குறைந்துள்ளமை கல்வியறிவில் வளர்ச்சியைக் காட்டுவதாக அவர் கூறினார்.

இதேபோன்று 1940 இல் இடை நிலைக் கல்வியைக் கற்றவர்களின் சராசரி வீதமானது 11 ஆகக் காணப்பட்டது.

இது 2004 இல் 62 வீதமாக உயர்ந்து காணப்படுகிறது.

இருந்த போதிலும் குறிப்பிட்ட சில மாகாணங்களிலுள்ள சில பிரதேசங்களில் பெண்களின் எழுத்தறிவு வீதமானது ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகக் காணப்படுகிறது.

குறிப்பாக வடக்கு -கிழக்கு , ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள சில பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்களின் எழுத்தறிவு வீதமானது குறைவாகக் கணப்படுவதனால் இப் பிரதேசங்களில் வழ்கின்ற பெண்களின் கல்வியறிவு மற்றும் எழுத்தறிவு மட்டங்களை விருத்தி செய்வதற்கான வேலைத் திட்ட மொன்றை கல்வி அமைச்சர் ஆரம்பிக்கவுள்ளதாக ஊடகச் செயலாளர் மேலும் கூறினார்.

(அ-5)

# தெகிவளையில் கைதான தமிழர்கள் தொடர்ந்து தடுப்புக் காவலில்

(கொழும்பு)

தெகிவளையில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை ஒன்றின் போது கைது செய்யப்பட்ட எட்டு தமிழர்கள் தொடர்ந்தும் தெகிவளைபொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுடைய அடையாளங்களை உறுதிப்படுத்துவதையும் அர்களுடைய பின்னணியை அறிந்து கொள்வதையும் நோக்கமாகக்கொண்டே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தம்முடைய அடையாளத்தை உரிய முறையில் உறுதிப்படுத்துபவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும ஏனையவர்கள் நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. அவ்வாறானவர்களைத் தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரிப்பதற்கான நீதிமன்றத்தின் அனுமதி பெறப்படும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களில் ஏழு பேர் மலையகத்தின் மஸ்கெலியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்க்ள் அனைவரும கட்டட நிர்மாணத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எட்டாவது இளைஞர் யாழ்ப்பாணம் நாவற்குழியைச்சேர்ந்தவர்எனவும் கொழும்பில் தங்கியிருந்து கணனித் துறையில் கல்வி கற்று வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிஅமைச்சருமான பி. இராதாகிருஷ்ணனிடம் அவர்களது குடும்பத்தவர்கள் முறைப்பாடு செய்திருக்கின்றார்கள்.

கொழும்பு மருதானையிலிருந்து பாணந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டியில் தெகிவளையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்தே தெகிவளைப் பகுதியில்படையினரின் சோதனைகள் தீவரப்படுத்தப்பட்டுள்ளன. (அ-5)

# கல்வித் தரத்தை உறுதி செய்வதற்கு கல்வி அமைச்சு எதிர்பார்ப்பு

(கொழும்பு)

கல்வித் துறையின் மனித மற்றும பௌதீக வளங்களின் விருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் கல்வித்தரத்தை உறுதி செய்ய கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இதற்கான வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு பிரிவு முன்னெடுத்து வருகிறது. கல்வி பண்பு சார் தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டு மற்றும கண்காணிப்பு வேலைத்திட்டம் தொடர்பான சுற்று நிருபம் சகல மாகாண வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிபாட்டுப் பிரிவின உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த 2 மாத காலமாக இவ்வேலைத் திட்டம் தொடர்பான வதிவிடச் செயலமர்வுகள் மாகாணந்தோறும் இப் பிரிவினால் நடத்தப்பட்டு வருவதாக அவர்குறிப்பிட்டார்.

பாடசாலை, கோட்ட வலய மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான வழிகாட்டிக் கைநூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் கூறினார்.

(அ-5)

# இருநூறு ஆயிரம் தொன் அரிசி வழங்க ஜப்பானிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

200 ஆயிரம் தொன் அரிசியை வழங்குமாறு இலங்கை தம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் இது குறித்து தாம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும் இதுவரை உத்தியோகபூர்வமாக இரு தரப்பும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லை என்றும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஜப்பானியப் பிரதமர் யசூகா புகுடாவும் இந்த வாரம் ரோமில் நடைபெறும் உணவு மற்றும் விவசாய சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். இருப்பினும் இச்சந்திப் பிற்கும் இவ் வேண்டுகோளுக்கும் இடையில் தொடர்புகள் எதுவுமில்லை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பான் தான் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் அரிசியில் ஒரு பகுதியை உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நாடுகளுக்கு வழங்கி உதவுவது குறித்து யோசித்துவரும் நிலையிலேயே இலங்கை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அதேவேளை பிலிப்பைன்ஸிடமிருந்து இறக்குமதி செய்துள்ள 1.5 மில்லியன் தொன் அரிசியில் 200 ஆயிரம் தொன் அரிசியை விற்பனை செய்வது குறித்தும் ஜப்பான் ஏற்கனவே பரிசீலித்து வருகிறது.

இதேவேளை கடந்த மாதம் 50 ஆயிரம் தொன் அரிசியினை இறக்குமதி செய்வது குறித்து தாய்லாந்துடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, மியன்மாரிடமிருந்து அரிசியினை இறக்குமதி செய்ய எண்ணியிருந்த போதிலும் சூறாவளியினால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பின் காரணமாக அது தடைப்பட்டிருப்பதையடுத்தே வேறு நாடுகளிடமிருந்து அரிசியை இறக்குமதி செய்வது குறித்து கவனம் செலுத்தி வருகிறது.

(அ-5)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 3

பகுதி -I
நேரம் - 45 நிமிடம்

க.கைலநாதன் (ஆசிரியர்)
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்


**கீழே தரப்பட்ட சொற்சோடிகளில் ஒன்று வித்தியாசமானது அதன் கீழ்க் கோடிடுக**

1) 1. மேடு- பள்ளம் 2. ஏர்- கலப்பை 3. வா- போ 4 .வரவு- செலவு
2) 2.கீரி -பிள்ளை 2. பசு- கன்று 3 கலை- பிளவு 4கோழி - குஞ்சுஎ

**சரியான விடையின் கீழ் கோடிடுக**


கடந்த மாதம்யாழ்ப்பாணத்தில் மழை பெய்த நாட்களில் ஒழுங்கு முறை கீழே தரப்பட்டுள்ளது எனின் வெற்றுக்கூட்டில் வர வேண்டியது.

3) ஞாயிறு - செவ்வாய் - வெள்ளி - செவ்வாய் -.............................................
1. சனி 2. திங்கள் 3. ஞாயிறு 4. செவ்வாய்


4)



மேலே தரப்பட்ட கோல ஒழுங்குகளை கவனித்து A, B என்பவற்றின் பெறுமதிகளுக்கு பொருத்தமானவற்றின் கீழ் கோடிடுக.
1)9,54 2)9,42 3)42,9 4)54,9

5) வித்தியாசமான உருவின் கீழ் கோர்டிடுக



6)



ஒரு அலங்காரப்பந்தலில் சிவப்பு பலூனும் மஞ்சள் பலூனும் அடுக்காகத் தொங்க விட பட்டிருந்தன. தொங்கிய பலூன்களின் எண்ணிக்கை 35. முதலாவது பலூன் சிவப்பு.
7) அந்நிரையிலுள்ள சிவப்பு பலூன்களின் எண்ணிக்கை?.................

8) நிரையில் இறுதியாக உள்ள பலூன்?...................

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் திருத்தமான வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக**

9) 1.அமைச்சர் விழாவைத் தொடங்கினார்கள் .
2.அமைச்சர் விழாவைத் தொடங்கினார்கள்.
3.அமைச்சர் விழாவைத் தொடக்கினார்.
4.அமைச்சர் விழாவினைத் தொடக்கினார்கள்.

**முன் பின் எண்களை எழுதுக**

10)..................................4000 ..............................

11)..................................4999..............................

12)..................................3002..............................


**சரியான சொல்லின் கீழ் புள்ளடி இடுக .**

13) பல்கலைக்கழகம் , பல்களைக்கழகம் , பல்கலைக்கலகம்

14) தொழிலாளி, தொழிலாளி ,தொழிலாழி

15) வாளைப்பழம், வாளைப்பளம், வாழைப்பழம்


**16. பொருத்தமற்ற உருவின் கீழ்க்கோடிடுக.**



17) ஒரு டசின் பேனையின் விலை 84. 00 ஆகும். 4 பேனைகளின் விலை என்ன ?........

18) ஒரு மெழுகுவர்த்தி 15 நிமிடத்தில் எரிந்து முடியும்.இரவு 6.00 மணிக்கு 4 மெழுகுதிரிகள் ஒன்றாகக் கொழுத்தப்பட்டால் அவை எத்தனை மணிக்கு எரிந்து முடியும்?...........

19)




தரப்பட்ட படம் ஒரு அளவுத்திட்டத்துக்கு அமைவாக வரையப்பட்டது. A →B தூரம் 1 100m எனின் B →Cயின்தூரம் என்ன? .........................

20) 8தோடம்பழங்களினதும் 5 மாம்பழங்களினதும்மொத்த விலை 140.00. ஒரு தோடம் பழத்தின் விலை 12.00 எனின்ஒரு மாம்பழத்தின் விலை என்ன? ..........................

**பழமொழிகளின் முற்பகுதியை எழுதுக.**

21) .................................. அடி சறுக்கும்

22) .................................. தூற்றிக்கொள்

23) ..................................திரண்டால் மிடுக்கு

24) .........................................கடிக்காது


25).........................................பொன்னல்ல

**வேறுபட்ட சொல்லின் கீழ்க்கோடிடுக**


| | | | |
|---|---|---|---|
| 26) குடை | கொடை | வடை | கூடை |
| 27) இரண்டு | மூன்று | நான்கு | ஐந்து |
| 28) சுற்றாடல் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் |
| 29) உந்துருளி | ஈருருளி | தொடருருளி | பாரவூர்தி |
| 30) பாண் | உண் | பண் | கண் |

**கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களை ஏதோவொரு வகையில் ஒழுங்கு படுத்தி தரப்பட்டுள்ள அட்டவணையில் எழுதுக.**

31) துவக்கு
விரும்பு
குருவி
புதிது



32)
1) துறவி
2) கைது
3) குகை
4) விளக்கு



**32 ஆம் 33ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் இலக்கத்தை சுற்றி வட்டமிடுக.**

32) வாரணன் இவ் வருடம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைதிய டைவது உறுதி என்றான். இக்கூற்று
1 சரியானது 2 பிழையானது 3 கூறமுடியாதது

33) கீரி ⟶ பாம்பு
பூனை ⟶.........................
1. நாய் 2. எலி 3. புலி

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழைஎனவும் அடையாளமிடுக**

34) மாணிக்க கங்கை கதிர்காமத்தின் ஊடாகப்பாய்கின்றது ( )

35) இலங்கையின் உயரமான மலை சிவனொளிபாதமலை ( )

36) இருப்போர்க்கு இல்லையென்னாது வழங்குபவர் உலோபி ( )

37) ஈர்ப்புவலி விசர்நாய்க் கடியினாலும் ஏற்படும் ( )

38)1.5L கொள்ளளவுடைய சோடாப் போத்தலை வாங்கி 6 நண்பர்கள் சமமாகக்குடித்தால் ஒருவர் எத்தனை ml குடித்திருப்பார்?.................................

**39ஆம்40ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட எழுத்துக்களிலிருந்து இரண்டு நகரங்களின் பெயர்களை எழுதுக**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | கு | ண் | ணா | டி | ரு | ல் | த |

39) ......................................................................

40)......................................................................

## வினாத்தாள் 2இன் விடைகள்

### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) 2 | 2)1 | 3)3 | 4)2 | 5)1 | 6)1,4,7 | 7)3,6,9 | 8)2,5,8 | 9)3 | 10)1 |
| 11)1 | 12)2 | 13)1 | 14)3 | 15)1 | 16)1 | 17)3 | 18)3cm | 19)1 | 20)2 |
| 21)3 | 22)1 | 23)2 | 24)1 | 25)3 | 26)1 | 27)2 | 28)1 | 29)3 | 30)2 |
| 31)3 | 32)3 | 33)1 | 34)2 | 35)1 | 36)3 | 37)2 | 38)1 | 39)Ⓡ | 40)x |

# மாவட்ட, பிரதேச செயலக தலைவர்களுக்கு தொலைத் தொடர்பு மாநாட்டு வசதி

## பொது நிர்வாக அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

நிர்வாக சேவையில் உள்ளோர் நேரத்தை சேமித்துக்கொள்ளவும் தேவையற்ற பிரயாணத்தை தவிர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கும் பொருட்டு சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலகத் தலைவர்களுக்கு தொலைத்தொடர்பு மாநாட்டுக்கான வசதிகளை பெற்றுக்கொடுக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்ட லுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கருஜெய சூரிய தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் 26ஆவது வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கொழும்போ அல்லது வேறு பிரதேசங்களில் நடைபெறும் மாநாடுகள் மற்றும் கூட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்ள நிர்வாக உத்தியோகத்தர்கள் வருவதனால் நேர விரயமாவதோடு தேவையற்ற பிரயாண அலைச்சலும் ஏற்படுகிறது. இவற்றைக்கருத்தில் கொண்டு இத்தகைய வசதியை மாவட்ட பிரதேச செயலக தலைவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒருகாலத்தில் இலங்கை மக்களின் நிர்வாகம் ஐரோப்பியர்களின் கைகளில் இருந்தது. தற்போது அதுமாறி இந்நாட்டு மக்களை இந்நாட்டவர்களே நிர்வகிக்கும் நிலை உருவாகியுள்ளது. இது ஒரு நாட்டுக்குரிய சிறப்பாகும்.

இன்று 3 முக்கிய பிரச்சினைகளை நாடு எதிர்நோக்கியுள்ளது. பயங்கரவாதம் எரிபொருள், உணவு விநியோகமே அவை. இவற்றால் ஏற்படும் சவால்கள் எப்படி இருப்பினும் அவை தீர்த்து வைக்கப் படவேண்டும்

இத்தகைய சவால்களை கருத்தில் கொண்டு இவற்றிற்கு விடையளிக்கக்கூடிய வகையில் புதிய திட்டங்களை வகுப்பதற்கு நிர்வாக உத்தியோகத்தர்கள் முன்வருவதோடு இந்நாட்டு நிர்வாகத்தை தரமுள்ளதாக விருத்தி செய்ய ஒவ்வொரு நிர்வாக உத்தியோகத்தர்களும் பாடுபடவேண்டும் என்றார். (அ-5)

# கொலைக் குற்றச்சாட்டில் கட்டாரில் தமிழ் இளைஞனுக்கு மரண தண்டனை விதிப்பு

இலங்கையர் ஒருவரை அடித்துக் கொலை செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் இன்னுமொரு இலங்கையருக்கு கட்டார்நீதிமன்றமொன்று மரண தண்டனை விதித்திருக்கிறது.

ரவி ராசலிங்கம் என்ற தமிழ் இளைஞனுக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சக நாட்டவரான பிரதீபன் ராமச் சந்திரன் என்ற இளைஞ்னை போத்தல் மற்றும் மட்பாண்டம் தயாரிக்கும் உபகரணத்தைப் பயன்படுத்தி தலையில் அடித்துக் கொலை செய்த குற்றத்திற்காகவே இவருக்கு கட்டார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருக்கிறது.

பழைய தகராறு காரணமா கவே இந்தச் சம்பவம் இடம்பெற்று இறுதியில் கொலையில் முடிந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம்சம்பவம் இடம்பெற்ற3 நாட்களின்பின்னர் அவரது தங்குமிடத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறது. கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்30 ஆம்திகதி யன்றே நஜ்மா எனும் பிரதேசத்தில் உள்தனது தங்குமிடத்தில் வைத்தே பிரதீபன் ராமச்சந்திரன் , ரவி ராசலிங்கத் தால் தாக்கப்பட்டிருக்கிறார் .

உயிரிழந்தவரின் குடும்பத்தினர் நட்டஈட்டுத் தொகையை ஏற்க மறுத்ததை அடுத்தே ரவி ராசலிங்கத்தை தூக்கிலிடுமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதே நேரம் இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரதிவாதி சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அந்நாட்டு தகவல்கள் தெரித்துள்ளன. (அ-5)

# புலிகளுக்கு கடத்த இராசயன பொருட்கள் பதுக்கியதான வழக்கில் இலங்கை மாணவனும் கைது

(மதுரை)

விடுதலைப் புலிகளுக்கு கடத்த இரசாயனப் பொருட்கள்பதுக்கிய வழக்கில் சென்னை கல்லூரி ஆராட்சி மாணவர் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு கடத்துவதற்காக இரசாயனப் பொருட்கள் பதுக்கியதாக மதுரையைச் சேர்ந்த நவநீத கிருஷ்ணன் ன்பவரை மதுரை புற நகர் கியூ பிரஞ்ச் பொலீசார் சமீபத்தில் கைது செய்தனர். அவர் கடத்துவதற்காக பதுக்கி வைத்திருந்த இரசாயனப் பொருட்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

இந்த நிலையில் அவர் பொலீசாருக்க அளித்த வாக்கு மூலத்தை அடுத்து சென்னை லயோலா கல்லூரி யில் எம்.எஸ். சி படிப்பை முடித்து விட்டு தற்போது ஆராட்சி படிப்பை மேற்கொண்டு வரும் இலங்கையைச் சேர்ந்த ஜெயக்குமார் என்ற மாணவரும் பொலிசாரால் கைத செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் அவ்ரை 15 நாட் கள் காவலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-5)

# வாரம் ஒரு வாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுநெருஞ்சில்

Botanical Name - Tribulus terrestris
Family -Zygophyllaceae
Engl- Calthrops
Sinh - Gokatu/Nerenchi

பல கிளைக் கொடிகளுடன் தரையில் ஒட்டி நன்றாகப் படரும்



ஒரு கொடி (An annual prostrate herb) சில கொடிகள் சுமார் 40செ.மீ வரை நீண்டிருக்கும். நுணுக்கமாக அவ்தானித்தால் கொடியில் மிக மெல்லிய சுணைகளிருப்பதைக் காணலாம் (Less hairy) ஒவ்வொரு கணுவிலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு காம்புகளுண்டு. காம்பின் இருபக்கங்களிலும் வரிசையாக நெருங்கிய இலைகள் அமைந் துள்ளன. இலைகள் சுமார்5-10 மி.மீ நீளமும், 5மி.மீ அகலமும் உடையன. சிறிய பூக்கள் மஞ்சள் நிறமுடையன. சிறிய தேற்றங்கொட்டைப் பருமனில் உருண்டுதட்டைய ாகவுள்ள காய் 4 அல்லது 5 பிரிவுகள் உடையது. ஒவ்வொரு பிரிவிலும் பெரிய முட்கள் இரண்டும் சிறிய முட்கள் இரண்டும் இருக்கின்றன. காய்ந்த பிறகு காய் 5பாகமாகப்பிரிந்து விடும். இது ஓராண்டு உயிர்வாழும். வருடம் முழுவதும் பூக்கக்கூடிய தாவர மாகும்.

### கிடைக்கும் இடமும் பயிரிடுதலும்

எல்லாவகை மண் களிலும் தானாக முளைத்து பயிரா கும். தோட்டப் பிர தேசங்க ளில் பரம்பல் அதிகம். விதைகளைத் தூவியும் கன்றுகளை 20 செ.மீக்கு ஒன்றாக நட்டும் வளர்க்கலாம்.

பயன்படும் பகுதி- முழுத் தாவரம் (Whole plant )

### மருத்துவச் செய்கைகள்

சிறுநீர் பெருக்கி- Diuretic
கற்கரைச்சி- Lithontriptic
குளிர்ச்சியுண்டாக்கி- Refrigerant
உள்ளழலாற்றி -Demulcent

### மருந்துச் சத்துக்கள்

Saponin
Glucoside
Un -Saturated acids
Essential oil
Resin
Nitrates

### மருத்துவப்பயன்கள்

1. இதன் காயையும், வேரையும் சிவப்புபச்சையரிசியோடு வேக வைத்து கஞ்சியை வடிகட்டி, சர்க்கரை சேர்த்து சிறுநீர் எரிச்சல், வெள்ளைசாய்தல் இவைகளுக்கு கொடுக்கலாம்.

2. நசுக்கிய நெருஞ்சில் கொடியை, கொத்த மல்லி, நீர் சேர்த்து குடிநீர் காய்ச்சி 30-60மி.லீ வீதம் காலை. மாலை கொடுக்க கல்லடைப்பு, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

3. சிறுநெருஞ்சில் இலைச் சாறு ஒரு தேக்கரண்டி எடுத்து சீனி சேர்த்துத நாள் ஒன்றுக்கு மூன்று முறை சாப்பிட, சிறுநீர் நன்கு கழியும் உடலிலெழும் அனல் தணியும்.

4. காயோடு கூடிய செடியை இடித்து, வெள்ளாட்டின் பாலில் ஒரு மணிநேரம் ஊறவைத்து பிழிந்து வடிகட்டி தேன் சேர்த்துக் கொடுத்துவர உடல் வன்மை பெறும்.

5. 45கிராம் இலை, 90கிராம் தானிய மாவுடன் சேர்த்து அடை தயா ரித்து பயன் படுத்தலாம்

6. இலையை எலும்பிச்சம் பழச் சாறு விட்டரைத்து புண்களுக்குப் பூசலாம். இலைச்சாற்றை வாய்ப் புண்களுக்கு கொப்ப ளித்து வர லாம்.

7. நெருஞ்சலின் இளந்தளிர்கள் , பூக்கள், இளம்பிஞ்சுகள் முதலியவற்றைப் பறித்து நீரை வடிக்காமல் அவித்து கீரையைப் போன்றும் பயன்படுத்தலாம் இதனால் வறட்டு இருமல் நீங்கும்.

8. சிறுநெருஞ்சில் செடிகள் சேகரித்து கழுவி, நிழலில் உலர்த்தி, இடித்து, பொடி செய்து , 1-2 கிராம் அளவு காலை,மாலை வெந் நீரில் கொடுக்க சிறுநீர் நன்கு கழியும். கல்லடைப்பு நீங்கும்.

குறிப்பு:- பொதுவாக சிறு நீர் கல்லடைப்பு நோய்களில் பயன்படுத்தலாம் வேறு கூட்டு மருந்து களுக்கு அனுபானமாக (துணை மருந்து) சிறு நெருஞ்சில் சாறு அல்லது குடிநீர் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் M.D.C.S
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

---

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



# நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று கொடியேற்றம்**

## காத்திடுவாய் கரம் நீட்டி

அலைகடல் தாலாட்ட
அமர்ந்தவளே அன்னை நாகா!
அலை அலையாய் மக்கள் கூட்டம்
மலர்ந்துவரக் கொடியேற்றம்

உலகம் விழித்தம்மா
உன் வாசல் ஓடி வர
கலகம் இனி வேண்டாம்
காத்திடுவாய் கரம் நீட்டி

*ஜெ. கந்தவேள்*
*கொக்குவில் கிழக்கு.*

## பரிவுடனே கொடியேற்றி அருள்வாயம்மா

எண்ணியவர் எண்ணி எண்ணி ஏங்கி வாடி
எழுந்த முதல் அழுத்தும் வரை நோய்துன்பங்கள்
கண்ணீரால் உடல் நனையச் செய்வதென்றால்
கருணையென்னே தொண்டருக்குக் காவல் யார் தான்
புண்ணான தொன்டர்மனம் பொலிவதெப்போ
அம்மாவுடன் திருவடிகள் தஞ்சமென்றே
பண்ணான திருமுறைகள் பாடி நின்றோம்
பரிவுடனே கொடியேற்றி அருள்வாய் அம்மா.

*கவிமணி கந்தமுருகேச தாசனார்.*

## நமக்கொரு தீர்வு தர நயினையிலே கொடியேற்று

நயினைதிருப்பதியாளே ஏற்றுந்தன் கொடியை
நமக்கொரு தீர்வு தர ஏற்றுந்தன் கொடியை
வியந்திடும் அற்புதமானவளே ஏற்றுந்தன் கொடியை
விடிவு தந்தே எம்மை ஆள ஏற்றுந்தன் கொடியை
சர்வதாரியை சமாதான ஆண்டாக்க ஏற்றுந்தன் கொடியை
சர்ப்பவடிவாய் எழுந்தவளே ஏற்றுந்தன் கொடியை
அற்புத வடிவோடு அரவணைப்பவளே ஏற்றுந்தன் கொடியை
அலைகடல்நடுவிலமர்ந்தவளே ஏற்றுந்தன் கொடியை

*மதுர கவி. காரை.*
*எம். பி. அருளானந்தன்.*

## கொடுமை களைந்து காப்பாயே

கயிலையிலே நடம்பயிலும் அரன்வனின் சக்தியம்மா
மயிலவனும் கரிமுகனும் உன்தனது சக்தியே தான்- உன்னை
பயில்வோரின் வினை களைந்து இடர்களைய என்று எண்ணி
நயினையிலே வீற்றிருக்கும் நாகபூஷணியே தாயே
கொடிதான வெடியோசை கேட்ட உளம் நொந்து போனோம்
கடிதான விலைவாசியால் வாழ்வு மிடியாகிப் போனதம்மா
அடியவர் நாம் மெய்யரும்பிஅடிபணிந்து நின்கோயில்
கொடியேற்றி வணங்குகிறோம் கொடுமைகளைந்து காப்பாயே

*சாரங்க பானி தனிகாசலபதி*
*அளவெட்டி.*

## மக்களின் துன்பம் நீக்க நாகபூஷணி தாயே கொடியேறு

சோதியாய் கடல் சூழும் சுந்தர மலர்ப் பவனம்
ஆதியாய் சேர்க்கை பெற்ற நாகபூஷணி அன்னையே
கொடியேறு
நீதிசால் இரு கரத்தால் நிமலையாய் தமிழர்க்கு
அபயம் நல்கும்
நீள் விழி தாளிரண்டும் நெருங்கியே கருணை நல்கும்
தாயே கொடியேறு
போதமாய் புகழாய் என்றும் புவனங்கள் பூத்து நிற்கும்
வேதமே வடிவாய் கொண்ட வித்தக சக்தியே கொடியேறு
காதலாய் கண்ணீர் மல்கும் கருதுவாய்
மக்களின் துன்பம் நீக்க நாகபூஷனி தாயே கொடியேறு

*சின் கந்தையா பொன்னாவளை*
*காரைநகர்.*

தீய சிந்தனை சேரா வண்ணம் இருக்க, பிரார்த்தனை அவசியம். தூய உணர்வை வளர்ப்பதற்கும் பிரார்த்தனைதான் வழி செய்யும்.

–சுவாமி இராமதாசர்

வலம்புரி

# இளைஞர்களுக்கு ரஜனி உணர்த்தும் ஆத்மீகம்

நடிகர் ரஜனிகாந் குசேலன் படப்பிடிப்பு முடிந்ததும் இமயமலை சென்று இறை தியானம் செய்யவுள்ளார்.

சினிமாத்திரை உலகில் 'சுப்பர் ஸ்ரார்' என்ற இமாலய புகழ்பெற்ற ரஜனிகாந், மிகுந்த இறை பக்தி உடையவர்.

ஆத்மீகத்தின் மூலமாகவே தனிமனிதன் முதல் மனித சமூகம் வரை உய்வு பெற முடியும் என்பது அவரின் அசையாத நம்பிக்கை. தமிழ்த் திரையுலகு கடந்து உலகளாவிய ரீதியில் பெருமை பெற்ற அவரின் தனி மனித நடத்தை இற்றைக்கால இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

பொதுவாக இளைஞர்கள் திரைப்பட நடிகர்களின் நடிப்பை மட்டுமே பார்த்துவிட்டு அதுவே நிஜம் என நினைத்துக் கொள்கிறார்கள்.

நடிப்பை நிஜமாக நினைத்து திரைப்படத்தை தமது வாழ்க்கைக்கு ஒப்புவிக்கும்போது அங்கு குழப்பங்களும் குளறுபடிகளும் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு நடிகர்களின் நடிபங்கை – பாத்திரத் தோற்றத்தை இற்றைக்கால இளைஞர்கள் தமது நிஜவாழ்க்கையில் பிரயோகிக்கும்போது காதல், வெறுப்பு, சண்டை, அடாவடித்தனம், சோகம், குற்றச்செயல், தற்கொலை முயற்சி போன்ற விபரீதங்கள் நடந்துவிடுகின்றன.

எனவே இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் திரைப்படப் பாத்திரங்களை நிஜமாக நம்பிக் கொள்ளாமல், அந்த நடிப்பை நடித்தவர்களின் உண்மையான வாழ்க்கை முறையை ஒருகணம் ஆராய்தல் வேண்டும்.

அவ்வகையில் நடிகர் ரஜனிகாந் தனது நடிப்பின் திறத்தால் கோடிக்கணக்கான ரசிகர்களை தன்வசம் ஈர்த்துக் கொண்டவர்.

'ரஜனி ஸ்ரைல்' என்ற மோகத்தில் சிக்கி உள்ளதையும் கெடுத்துக் கொண்ட இளைஞர்கள் இப்போது ரஜனியின் உண்மையான வாழ்க்கை முறையை ஒரு கணம் ஆராய்வார்களாயின் ஆத்மீகம், இறைநம்பிக்கை, தூய்மையான வாழ்க்கை என்ற நெறிமுறையைக் காணக் கூடியதாகவுள்ளது.

எனவே திரைப்படத்தில் ரஜனி ஸ்ரைலைப் பார்த்துவிட்டு அதன்படி எடுப்பெடுக்கும் இளைஞர்களுக்கு ஓர் தார்மீகப் பொறுப்புண்டு.

அது என்னவெனில், ரஜனி நிஜ வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் ஆத்மீகத்தை –இறை நம்பிக்கையை தாமும் பின்பற்றுவத்தாகும்.

ரஜனி நடித்த திரைப்படத்தைப் பார்த்து விட்டு அதன்படி தாமும் பாவனை செய்வோர்க்கு, ரஜனிகாந் தியானம் செய்வதற்காக இமயமலைக்குச் செல்கிறார் என்ற செய்தி சமர்ப்பணம்.

# கிழக்கு மாகாணசபை நடவடிக்கைகள் தமிழில் முன்னெடுக்கப்படும்

## மாகாண ஆளுநர் தகவல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையின் அனைத்து செயற்பாடுகளும் தமிழ் மொழியில் முன்னெடுத்துச் செல்லப்படவிருப்பதுடன் சிங்கள உறுப்பினர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தேவையான நேரத்தில் சிங்கள மொழிபெயர்ப்பு வழங்கப்படு மென கிழக்கு மாகாணசபை ஆளுநர் ரியர் அடமிரல் மொஹான் விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று காலை 9.45 மணிக்கு நடைபெறுமென அவர் கூறினார். மாகாணசபை அமர்வுகள் இடம்பெறுவதற்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டு இதுவரை பதவிப்பிரமாணம் செய்யாதவர்கள் இன்று காலை9 மணிக்கு தனது அலுவலகத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என அவர் கூறியுள்ளார்.

அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் கிழக்கு மாகாணசபைக்கான முதல்வர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார். இதன்பின்னர் பிரதிமுதல்வர் தெரிவு செய்யப்படுவார். ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மாகாணசபையின் முதலாவது ஆரம்ப நிகழ்வுக்கான திகதி தீர்மானிக் கப்படுமென மொஹான் விஜய விக்ரம தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் முக்கிய விடயங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படும். ஆளுநர் அலுவலகம் மற்றும் சிரேஷ்ட செயலாளரின் அலுவலக விபரங்கள், திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள் குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

கிழக்கு மாகாணசபை அமைச்சர்கள் மாதத்தில் ஒரு முறை ஆளுநரைச் சந்தித்து மாதத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய விடயங்கள் குறித்து சிரேஷ்ட செயலாளருடன் இணைந்து திட்ட மிடல் களை மேற்கொள்வார்கள். அமைச்சர்கள் வாராந்தம் கூட்டங்களைக் கூட்டி நிர்வாக ரீதியான பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்மானங்களை எடுப்பார் கள்.

கிழக்கு மாகாணசபை அங்குரார்ப்பணம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சிபட்டறையொன்றுமுன்னெடுக்கப்படும் மாகாண சபை யின் செயற்பாடுகள் குறித்து அவர்களுக்கு அங்கு விளக்கமளிக்கப்படும் என கிழக்கு மாகாணசபை ஆளுநர்ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்கிரம மேலும் தெரிவித்துள்ளார். (அ–5)

# செய்மதி மூல சாட்சியம் நிறுத்தப்பட்டுள்ளது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரித்து வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தமது விசாரணைகளின் போது வீடியோ தொழில்நுட்பம் மூலம் வழங்கப்படும் சாட்சியங்களை பதிவு செய்வதை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

மூதூரில் அக்ஷன் பெய்ம் நிறுவனத்தின் 17 தொண்டு நிறுவன பணியாளர்களின் படுகொலை திருகோணமலை மாணவர்களின் படுகொலை சம்பவங்களை விசாரித்துவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த இரு சம்பவங்களின் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் முக்கிய சாட்சி கள் சிலரும் வெளிநாடுகளில் தஞ்ச மடைந்துள்ள னர்.

அவர்கள் இதுவரை காலமும் நடைபெற்ற ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது தமது சாட்சியங்களை வெளிநாட்டிலிருந்து இருந்தபடியே வீடியோ தொழில் நுட்பம் மூலம் வழங்கி வந்தனர்.

இந்த நிலையிலேயே வீடியோ தொழில்நுட்பம் மூலம் வழங்கப்படும் சாட்சியங்கள் பதிவு செய்வதை இடைநிறுத்தியுள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வந்த உத்தரவுக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் நிசங்க உதாலகம குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்மதி சாட்சியத்திற்காக வெளிநாடுகள் சில நிதியுதவிகளை வழங்கியதாகவும் இதன் காரணமாக குறித்த வெளிநாடுகளின் விருப்பப்படியே ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அண்மையில் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் குறித்த வசதி நிறுத்தப்பட்டமையானது கடும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணையை முடிக்கும் நடவடிக்கைக்கான முதல் கட்டம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ–5)

# இரண்டு மில்லியன் தொன் அரிசி, கோதுமையுடன் "சார்க் உணவு வங்கி" விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

சார்க் அங்கத்துவ நாடுகளின் அங்கீகாரத்துடன் ''சார்க் உணவு வங்கி'' விரைவில் இயங்கவுள்ளதாக நம்பகமான வட்டராங்கள் தெரிவிக்கின்றன.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் எட்டு நாடுகளில்பங்களாதேஷ், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான்ஆகிய நான்கு நாடுகளும் இந்த நடவடிக்கைக்கு அங்கீகாரமளித்துள்ளன.

அதேவேளை, மாலைதீவு , பூட்டான், நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய ஏனைய உறுப்பு நாடுகளின் அங்கீகாரத்திற்கு காத்திருப்பதாகவும் உணவு வங்கி ஸ்தாபிக்கும் பிரகடனத்திற்கு அவை அங்கீகாறம் வழங்கியதுடன் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

2007 ஏப்ரல் 3 ஆம் திகதி இந்தியாவில் கடைசியாகஇடம்பெற்ற சார்க் உச்சி மாநாட்டில் சார்க் உணவு வங்கியை உருவாக்குவதற்கான பிரகடனம் மேற்கொள்பட்டது. ஆரம்பத்தில சார்க் உணவு கையிருப்பை மேற்கொள்வதென்ற திட்டம் முன்வைக்கப்பட்டது. பின்னர் உலகளாவிய உணவுநெருக்கடியை கருத்திற் கொண்டு சார்க் உணவு வங்கியை அமைப்தென தீர்மானிக்கப் பட்டது.

2மில்லியன் தொன் அரிசி, கோதுமை கையிருப்புடன் இந்த உணவு வங்கி ஆரம்பிக்கப்படுமென இராஜதந்திர வட்டாரமொன்று தெரிவித்துள்ளது. இந்த உணவுப் பொருள் கையிருப்புக்கு அங்கத்துவ நாடுகளும் பங்களிப்பை வழங்கும்.

உறுப்பு நாடுகளில் சார்க் உணவு வங்கி என்ற பெயரில் இந்தக் கையிருப்புகள் சேகரித்து வைக்கப்படும்.

சார்க் அங்கத்துவ நாடொன்று உணவு நெருக்கடியைஎதிர் கொள்ளும் போது அவசர நிலைமையை சமாளிக்க இந்த உணவு வங்கியிலிருந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட நாடொன்றின் உணவு வங்கியலுள்ள உணவுப் பொருள் போதாமலிருந்தால் சார்க் உறுப்பினராகவுள்ள அயல் நாடொன்றிலிருந்து கடனாக உணவுப் பொருள் பெற்றுக்கொள்ளப்படும் நெருக்கடி முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் கடனாகப் பெற்ற உணவுப் பொருளை அந்தக் குறிப்பிட்ட நாட்டின் உணவு வங்கிக்கு திருப்பிச் செலுத்திவிட வேண்டும் எனவும் இந்த நாடுகள் இணக்கம் கண்டிருக்கின்றன . (அ–5)

ஓலைச் சுவடிகள் 37

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## வடக்கு திசையில் தலை வைத்து ஏன் படுக்கக் கூடாது?

வடக்கு பாகம் தலைவைத்து படுக்கக் கூடாதென்று முதியோர்கள் கூறும் போது சிறுவர்கள பொதுவாக அதைப் பொருட்படுத்துவதில்லை.

வாஸ்து சாஸ்திரப்படி தூங்குவதற்காகத் தலைவைப்பது கிழக்கு பாகத்திலானால் மிக உத்தமம்.

அது இயலாமல் போனால் தெற்கு திசையில் தலைவைக்கலாம்.

காந்தத்திற்கு ஈர்க்கும் சக்தி அளிப்பது "மக்னெடிக்கு லைன்ஸ் ஓவ்போர்ஸ்" அதாவது காந்த புலரேகைகள். இந்த புலரேகைகள் காந்த மண்டலத்தில் செயல் படுகின்றன.

ஒவ்வொரு காந்தத்திற்கும் தெற்கு துருவமும் வடக்கு துருவமும் உண்டு. தெற்கில் ஆரம்பிக்கும் புல ரேகைகள் வடக்கு நுனியில் முடிகின்றது.

மேலே கூறப்பட்ட புல ரேகைகள் பூமியின் தெற்கு துருவத்திலிருந்து புறப் பட்டு வடதுருவத்தில் வந்து சேருகின்றன. பூமியின் ஈர்ப்பு சக்தியும் இவையுடன் சார்ந்தவை. மனித உடலிலும் மிகக் குறைந்த அளவிலான காந்தசக்தி செயல்[illegible] கின்றது என்று கண்டறிந்துள்ளனர்.

வடக்கே தலைவைத்து படுக்கும் போது பூமியின் காந்த மண்டலமும் மனித[illegible] லின் காந்த மண்டலமும் எதிர்த்து செயல்படும் நிலை ஏற்படுகின்றது. இது [illegible] மாக நிகழ்ந்தால் அதாவது வழக்கமாக வடக்கே தலைவைத்துப் படுப்பதால் [illegible] தனில் "ஹிஸ்டீரியா" என்ற நோயின் பாதிப்பு நாளடைவில் உண்டாகலாம் [illegible] நவீன மருத்துவத்துறை வெளிப்படுத்தியுள்ளது.

# வெடிபொருள்கள் குறித்து அவதானமாக இருங்கள்

## பாதுகாப்புத் தரப்பு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வெடிபொருள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மக்களைக் கேட்டுள்ளது. இது தொடர்பாக பலாலி படைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

கட்டுவன் தெற்குப் பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி மாலை 6.30 மணியளவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டும் மேலும் இரண்டு சிறுவர்கள் காயங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர்.

தனது வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த 9 வயதுடைய சிறுவன் கொல்லப்பட்டும் 4 உம் 6 உம் வயதுகளுடைய சிறுவர்கள் இருவர் காயமடைந்தும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வீட்டுக்கு அருகில் பாதுகாப்புத் தரப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்வதற்காக இந்தக் கைக்குண்டு மறைத்து வைக்கப்படுவதைக் கண்ணுற்ற இந்தச் சிறார்கள் அதனை எடுத்து விளையாட முற்பட்டபோதே இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு கைக்குண்டுகள், கிளைமோர்க் குண்டுகள் உட்பட பல்வேறு பேரழிவு ஆயதங்கள் யாழ்.குடாவில் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அது பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பாதுகாப்புப் படையினர் பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றனர்.

மேலும் கவனிப்பாரற்று இருக்கும் சந்தேகமுள்ள பொதிகள், பொருள்கள் என்பவற்றை தீண்டாது அந்தப் பகுதியில் இருப்போரை அப்புறப்படுத்தி மிக அருகில் இருக்கும் இராணுவ அல்லது பொலிஸ் காவலரணுக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (எ)

# தமிழ் வர்த்தகரைக் கத்தியால் குத்திவிட்டு ஒன்றரை இலட்சம் ரூபா பணம் அபகரிப்பு

அவிசாவளையில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரையும் ஊழியரையும் கத்தியால் குத்தி விட்டு ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்தை இனந்தெரியாதவர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்தினால் படுகாயமுற்ற ஊழியர் ஆபத்தான நிலையில் அவிசாளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறு காயங்களுக்குள்ளான வர்த்தகர் வீடு திரும்பியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாது,

அவிசாவளையில் அமைந்துள்ள தனது வர்த்தக நிலையத்தில் கடமைகளை முடித்து விட்டு நான்கு ஊழியர்களுடன் வீடு திரும்பி உள்ளார் மேற்படி வர்த்தகர்.

கொட்டபொடவத்தையில் உள்ள தனது வீட்டிற்கு திரும்பும் வழியில்இவர்களை வழிமறித்த ஒரு குழுவினர் வர்த்தகரையும் ஊழியர்களையும் தாக்கவிட்டுப் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்திலேயே வர்த்தகரும் ஒரு ஊழியரும் கத்திக்குத்துக்கு உள்ளாகியுள்ளனர். இது குறித்து அவிசாவளைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

## பட்டதாரி...

இ.இளங்கோவன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை நடைபெற்றபோது வடக்குக் கிழக்கு மாகாண சபை நிர்வாகம் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் பெயர் விபரம் நாளைய வலம்புரியில் வெளிவரும். (ச-5)

## மாங்குளத்தில் கிளைமோர்...

தலை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே நடத்தியிருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சுமத்தியிருக்கின்றனர். எனினும் இராணுவப் பேச்சாளர் இந்தக் குற்றச் சாட்டை மறுத்துள்ளார்.

மாங்குளத்திலிருந்து ஒட்டிசுட்டானுக்குச் செல்லும் வீதியில் 19 ஆம் கட்டைப்பகுதியில் இந்தக் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலுக்கு இலக்காகிய காரில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட 10 பேர் பிரயாணம் செய்ததாகவும் இவர்களில் ஒரு பெண் மற்றும் இரண்டு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் ஏனையோர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## வெள்ள அனர்த்தத்தில்...

இடம்பெற்று வரும் மண் சரிவுகளால் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

களுத்துறை புளத்சிங்கள என்ற இடத்தில் ஏற்பட்ட மண் சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கடந்த முதலாம் திகதி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் தவிர ஏனையோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் மண் சரிவில் சிக்கியும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய நாள் 5 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூவர் காலியில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்த படகு மின் கம்பத்தில் மோதியதால் மின்சாரம் தாக்கி அதிலிருந்த மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

ஏனைய இருவரும் பதுளையில் இடம்பெற்ற மண் சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளனர். களுத்துறையில் களுகங்கை பெருக்கெடுத்தோடுவதாலும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளமும் களுத்துறையூடாகவே வழிந்தோடுவதால் களுத்துறைப் பகுதியில்பெரும்வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் வெள்ள மற்றும் மண் சரிவு அபாயம் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## குற்றவாளிகள் எவரானாலும்...

ணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விசாரணைகள் குறித்த தகவல்கள் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது.

இதன் மூலம் எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மக்கள் அறியக் கூடிய வாய்ப்புக் கிட்டும். ஏனெனில் தற்போது இவ்வாறானதொரு நடைமுறை அமுலில் இல்லை.

இந்த விசாரணைகளை அரசாங்கம் மேற்கொண்டாலும் அது தொடர்பாக மக்கள் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பற்ற சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது.

இதன்மூலம் அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் ஒரு நல்ல அபிப்பிராயம் உருவாகக் கூடிய வாய்ப்பில்லை. குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்படாத நிலைமை அரசாங்கத்திற்கு அனைத்துப் பக்கங்களிலும் சிக்கலை ஏற்படுத்தக் கூடும்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து மிகவும் உன்னிப்பாக நான் அவதானித்து வருகின்றேன். இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டும் என நான் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றேன் என்றார். (ச-5)

## காணாமல் போனோர்...

கருத்துத் தெரிவிக்கும் போது,

காணாமல் போனவர்கள் விடயமாக யாழ். குடாநாட்டில் வருகின்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்க்கும்போது இதில் பெரும்பாலான முறைப்பாடுகள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களிடமிருந்தே முன்வைக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் வறுமை நிலையை காரணம் காட்டி எவரும் அம்மக்களை தவறான வழிகளில் பயன்படுத்துவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

மக்களின் பங்களிப்புக்களுடன் முன்னெடுக்கப்படுகின்ற எனது வேலைத்திட்டங்கள் மூலம் இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியும் என்றும் இதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்புக்கள் மிக அவசியமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் உறவினர்களின் வேதனையைத் தான் நன்கு உணர்வதாக தெரிவித்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்,

காணாமல் போனவர்கள் தொடர்பில் தான் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அதனால் நம்பிக்கையுடன் இருந்து கொள்ளும்படியும் காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் கேட்டுக்கொண்டதாக சமூக சேவைகள் அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## விடுதலைப்புலிகளை சர்வதேசம்...

லண்டன் பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்தொடர்ந்துகருத்துத்தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தினால் மீறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந் நிலையில் புலிகள் தொடர்பிலான இந்தியாவின் அணுகுமுறை மாற்றம் பெற்று எம் மீதான தடை நீக்கப்பட்டு எங்களை அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்றார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்தப்படும் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியின் தாக்குதலானது இலங்கை இராணுவத்தின் பலவீனத்தையே காட்டுவதாக விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடர்ச்சியாக நடக்கும் கிளைமோர்த் தாக்குதல்கள் குறித்து பி.பி.ஸி. தமிழோசையிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஆழ ஊடுருவும் அணியினர் உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஊடுருவித் தாக்குதல் நடத்துவது உங்கள் அமைப்பின் பலவீனத்தைக் காட்டவில்லையா? என்று கேட்டதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் நேரடியாக மோத முடியாமல் தோல்வியைத் தழுவும் நிலையிலேயே அரசாங்கப் படைகள் இவ்வாறான அநாகரிகமான தாக்குதல்களை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தப்படும் குண்டுத் தாக்குதல்களுக்கும் தமது அமைப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்றும் தமது அமைப்பு ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு என்றும் தாங்கள் மக்களை நேசிப்பவர்கள் என்றும் அனைத்து உயிர்களையும் நேசிப்பவர்கள் என்றும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்துக்காக நடத்தப்பட்ட தேர்தல் மாகாண சபைத் தேர்தல் அல்ல. அது அரசினால் நடத்தப்பட்ட ஒரு நாடகம். அதை ஒரு தேர்தலாகத் தாம் பார்க்கவில்லை எனத் தெரிவித்தார். (ச-5)

## ஆழ ஊடுருவும்...

கொள்ள முயற்சித்துள்ளது. அவர்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி அவர்களின் நடவடிக்கையை முறியடித்து விரட்டியடித்துள்ளனர்.

இதில் படைத் தரப்புக்கு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இத் தாக்குதலின்போது படையினரிடமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (எ-5)

## கிழக்கு...

தொடர்ந்து பேரவைத் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந் நிகழ்வு தொடர்பாக திருகோணமலை நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் விளைவாக கிழக்கு மாகாண சபையை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ள மக்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (ச-5)


யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடாக் கிளை

கண்ணீர் அஞ்சலி



ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபர்

துடவைத்திலிங்கம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம்.

அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடாக் கிளை

(C-1186)



யாழ்.கந்தர்மடம் - அரசடி வீதி
அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

வருடாந்த ஆனி மஹோற்சவ விஞ்ஞாபனம்

04.06.2008 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 04.06.2008 புதன் | கொடியேற்றம் | காலை 10 மணி |
| 16.06.2008 திங்கள் | சப்பறம் | மாலை 6 மணி |
| 17.06.2008 செவ்வாய் | தேர் | காலை 10 மணி |
| 18.06.2008 புதன் | தீர்த்தத் திருவிழா காலை 10 மணிக்கு நடைபெறும் | |

உபயம்

திருவிழா உபயகாரர்களும் அடியார்களும்
ஆலய ஆதீன கர்த்தாவும்

(1323)


பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.